ADB

# நாட்டிற்கான கூட்டாண்மை மூலோபாயம்

ஜீலை 2017

## இலங்கை, 2018 – 2022
## – மேல் நடுத்தர- வருமான நாட்டின் நிலைக்கான மாற்றம்

பணிப்பாளர்கள் சபையினால் ஒப்புதல் அளிக்கப்படும் வரை இந்த ஆவணம் விநியோகம் செய்யப்படுவது மட்டுப்படுத்தப்படுகின்றது. அந்தப் புறக்குறிப்பினைத் தொடர்ந்து, ADB இந்த ஆவணத்தை, ADB இன் பொதுத் தொடர்பாடல் கொள்கை 2011 இன் பிரகாரம், பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும்.

Asian Development Bank

## செலவாணி சமநிலைகள்

(25 ஜூலை 2017 இல் இருந்தவாறு)

| | | |
|---|---|---|
| நாணய அலகு | - | இலங்கை ரூபாய்/கள் (இ. ரூபா/ இ. ரூபாய்கள்) |
| இ. ரூபாய் 1.00 | - | $0.00643 |
| $1.00 | = | இ. ரூபா 155.35 |

## சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| ஆ.அ.வ. | – | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| நா.க.ஆ. | – | நாட்டினை கண்டறியும் ஆய்வு |
| இ.மி.ச. | – | இலங்கை மின்சார சபை |
| நா.கூ.மூ. | – | நாட்டின் கூட்டாண்மை மூலோபாயம் |
| கொ.தி.பொ.பா. | – | கொழும்பு – திருகோணமலை பொருளாதார பாதை |
| நீ.நி.வ. | – | நீடிக்கப்பட்ட நிதி வசதி |
| வெ.நே.மு. | – | வெளிநாட் நேரடி முதலீடு |
| சு.வ.உ. | – | சுதந்திர வர்த்தக உடன்படிக்கை |
| மொ.உ.உ. | – | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| த.தொ.தொ. | – | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| ச.நா.நி. | – | சர்வதேச நாணய நிதியம் |
| ஜ.ச.ஒ.நி. | – | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் |
| தொ.ப.ப.வி. | – | தொழிலாளர் படை பங்கேற்பு விகிதம் |
| செ.ப. | – | செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு |
| சா.மூ.வ. | – | சாதாரண மூலதன வளங்கள் |
| பொ.த.கூ. | – | பொது-தனியார் கூட்டாண்மை |
| தெ.ஆ.து.பொ.ஒ. | – | தெற்கு ஆசிய துணைப் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு |
| சி.ந.நி. | – | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் |
| அ.உ.நி. | – | அரச-உடமை நிறுவனங்கள் |
| தொ.உ. | – | தொழில்நுட்ப உதவி |
| தொ.தொ.க.ப. | – | தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி |
| மே.ந.வ.நா. | – | மேல்- நடுத்தர வருமான நாடு |

## குறிப்பு

இந்த அறிக்கையில் “$” குறிப்பது US டொலர்களாகும்

இந்த ஆவணம் அதிகளவிலானவர்களுக்கு வாசித்து அறிந்து கொள்வதற்காக ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த மொழி பெயர்ப்பு சரியானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி முயற்சிகளை எடுத்துவரும் அதே வேளையில் ஆங்கிலமே ஆசிய அபிவிருத்தி வங்கி தனது நாளாந்த சேவைகளுக்கு கடைப்பிடிக்கும் மொழியாகும். இந்த ஆவணத்தின் ஆங்கிலப் மூலப்பிரதியே மிகவும் சரியானதென்று நாம் உறுதிப்படுத்தலாம். (இதுவே உத்தியோகபூர்வ ஆவணமாகும்) இது சம்பந்தமாக ஏதாவது ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டுமாயின் ஆங்கில மூலப்பிரதி ஆவணத்தை பார்ப்பது பொருத்தமாகும்.

| | |
|---|---|
| **உதவித் தவிசாளர்** | டபிள்யூ. ஷாங், செயல்பாடுகள் 1 |
| **பணிப்பாளர் நாயகம்** | எச். கிம், தெற்கு ஆசிய திணைக்களம் (தெ.ஆ.தி.) |
| **பணிப்பாளர்** | எஸ். விடோவதி, இலங்கை வதிவிடப் பணிமனை (இ.வ.ப.ம.) தெஆதி |
| **குழுத் தலைவர்** | ரி. ஹயாஷி, சிரேஷ்ட நாட்டிற்கான பொருளியலாளர், தெற்கு ஆசியத் திணைக்களம் |
| **குழு உறுப்பினர்கள்** | என். எம் அமரசிங்க, திட்ட முகாமைத்துவ நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>பி. பண்டார, சிரேஷ்ட திட்ட அலுவலர் (இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல்), தெற்கு ஆசியத் திணைக்களம்<br>கே. தஹநாயக்க, சிரேஷ்ட திட்ட அலுவலர் (நகரம் மற்றும் நீர் வழங்கல், சுகாதாரம்), தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எல். கோர், சிரேஷ்ட நீர்வளங்கள் நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>ரி. ஹொஷினோ, நிதித்துறை நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>ஏ. ஹுவாங், நிதி நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>ஜே. ஹுவாங், முதன்மை நகர அபிவிருத்தி நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எஸ். ஜயகொடி, பொருளாதார பகுப்பாய்வாளர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எச். ஜயசுந்தர, இணைத் திட்ட அலுவலர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எஸ். ஜயசுந்தர, சமூக அபிவிருத்தி அலுவலர் (பால்), தெற்கு ஆசியத் திணைக்களம்<br>கே. கசஹர, போக்குவரத்து நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எம். கஹுமுக்ஹநொவ், முதன்மை சக்தி நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>யூ. குமார், பொருளியலாளர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>டி. லம்பர்ட், சிரேஷ்ட நிதி நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>கே. நக்காய், சிரேஷ்ட போக்குவரத்து நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எம். நகனெ, பொருளியலாளர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>ஏ. நாணயக்கார, சிரேஷ்ட திட்ட அலுவலர் (போக்குவரத்து), தெற்கு ஆசியத் திணைக்களம்<br>ஏ. நவேரா, சிரேஷ்ட செயற்பாட்டு அலுவலர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எம். ஒஷாகி, சிரேஷ்ட பிரிவு முகாமைத்துவ நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எம். றொஸ்னர், முதன்மை போக்குவரத்து நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>டி. சிங்கிளேயர், இணைத் திட்ட அலுவலர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>ஆர். சிலங்ஜென், சிரேஷ்ட நகர அபிவிருத்தி நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>ஜி. சொங், முதன்மை சமூகவியல் துறை நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எப். டொனிரி, முதன்மை சமூக அபிவிருத்தி நிபுணர் (பால் மற்றும் அபிவிருத்தி), தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எச். விக்கிரமசிங்க, சிரேஷ்ட பொருளியல் அலுவலர், தெற்கு ஆசியத் திணைக்களம்<br>ஆர். விமலசேன, சிரேஷ்ட திட்ட அலுவலர் (சக்தி), தெற்கு ஆசியத் திணைக்களம்<br>எச். வின், சிரேஷ்ட சுகாதார நிபுணர், தெற்கு ஆசியத் திணைக்களம் |
| **சரியிணை மீளாய்வாளர்கள்** | ஈ. கின்டிங், பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பிராந்திய ஒத்துழைப்புத் திணைக்களம்<br>வை. ஷாய், தொழில்நுட்ப ஆலோசகர் (சக்தி), நிலைபேறான அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்ற திணைக்களம் |

ஏதேனும் ஒரு நாட்டு கூட்டு மூலோபாயம் தயாரிப்பதில், ஏதேனும் திட்ட நிதியளிப்பு, அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டாட்சி பிரதேசத்திற்கு அல்லது புவியில் பிரதேசத்திற்கு யாதாயினும் குறிப்பு அல்லது பணியமர்வினை இந்த ஆவணத்தில் மேற்கொள்ளும் போது, ஆசிய அபிவிருத்தி வங்கி யாதாயினும் நாடாட்ச்சியெல்லை அல்லது பிரதேசம் தொடர்பில் அதன் சட்ட அல்லது நிலை தொடர்பாக எந்த தீர்ப்புக்களையும் மேற்கொள்ள எண்ணியிருக்கவில்லை.

# உள்ளடக்கம்

பக்கம்


ஒரே பார்வையில் நாடு

I. நாட்டிற்கான கூட்டாண்மை மூலோபாயம் நிழற்பட நொடிப்பு 1

II. நாட்டின் அபிவிருத்தி சூழல் 2

III. நாட்டின் மூலோபாயக் கட்டமைப்பு 5

அ. முன்னைய மூலோபாயத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் 5
ஆ. தேசிய அபிவிருத்தி மூலோபாயம் 5
இ. அபிவிருத்திப் பங்காளர்களின் வகிபாகம் 6
ஈ. ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலோபாய மற்றும் கருப்பொருள்சார் குறிக்கோள்கள், மற்றும் செயல்பாட்டு முன்னுரிமைகள் 7
உ. அறிவுசார் உதவிகளுக்கான முன்னுரிமைகள் 12

IV. மூலோபாய செயல்படுத்தல் 12

அ. குறிகாட்டி வள பரிமாணங்கள் 12
ஆ. செயல்படுத்தல் முன்னுரிமைகள் 13
இ. விளைவுகளைக் கண்காணித்தல் 14
ஈ. ஆபத்துக்கள் 14

V. பின் இணைப்புக்கள்

1. நாட்டிற்கான கூட்டாண்மை மூலோபாய விளைவுகள் கட்டமைப்பு 16

2. நாட்டு அறிவு திட்டம் 18

3. இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியல் 23

## ஒரே பார்வையில் நாடு

| பொருளாதாரம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| மொ.உ.உ. ($ பில்லியன், நடப்பு) | 68.4 | 74.3 | 79.4 | 80.6 | 81.3 |
| மொ.உ.உ. தனிநபர் வருமானம் ($, நடப்பு) | 3,351 | 3,610 | 3,821 | 3,844 | 3,835 |
| மொ.உ.உ. வளர்ச்சி ($ மாறா விலைகளில்) | 9.1 | 3.4 | 5.0 | 4.8 | 4.4 |
| விவசாயம் | 3.9 | 3.2 | 4.6 | 4.8 | 4.2 |
| தொழில்துறை | 9.0 | 4.1 | 4.7 | 2.1 | 6.7 |
| சேவைகள் | 11.2 | 3.8 | 4.8 | 5.7 | 4.2 |
| மொத்த உள்நாட்டு முதலீடு (% மொ.உ.உ. யின்) | 39.1 | 33.2 | 32.3 | 28.4 | 31.5 |
| மொத்த உள்நாட்டு சேமிப்பு (% மொ.உ.உ. யின்) | 27.2 | 24.6 | 24.2 | 20.9 | 23.8 |
| மொத்த உள்நாட்டு நுகர்வோர் விலைச் சுட்டெண் (வருடாந்த % மாற்றும்) | 7.6[a] | 6.9[a] | 3.3[a] | 3.8[b] | 4.0[b] |
| திரவத்தன்மை (M2b) (வருடாந்த % மாற்றம்) | 17.6 | 16.7 | 13.4 | 17.8 | 18.4 |
| ஒட்டுமொத்த நிதி உபரி (பற்றாகுறை) (மூ மொ.உ.உ. யின்) | (5.6) | (5.4) | (5.7) | (7.6) | (5.4) |
| வணிகச்சரக்கு வர்தக சமநிலை (% மொ.உ.உ. யின்) | (13.8) | (10.2) | (10.6) | (10.3) | (11.0) |
| நடைமுறை கணக்கு நிலுவை (% மொ.உ.உ. யின்) | (5.8) | (3.4) | (2.5) | (2.5) | (2.4) |
| வெளிநாட்டு கடன் சேவை (% பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியின்) | 19.7 | 26.8 | 20.8 | 27.3 | 25.0 |
| வெளிநாட்டுக் கடன் (% மொ.உ.உ. யின்) | 54.2 | 53.7 | 54.1 | 55.7 | 57.5 |

| வறுமை மற்றும் சமூகம் | 2000 | அண்மைய | |
|---|---|---|---|
| மக்கள் தொகை (மில்லியன்) | 19.1 | 21.2 | [2016] |
| மக்கள் தொகை வளர்ச்சி (வருடாந்த மாற்றம் %) | 1.4 | 1.1 | [2016] |
| தாய் இறப்பு விகிதம் (100,000 உயிர் பிறப்புக்களில்) | 57.0 | 30.0 | [2015] |
| சேய் இறப்பு விகிதம் (1 வயதிற்குக் கீழ் / 100,000 உயிர் பிறப்புக்களில்) | 14.0 | 8.4 | [2014] |
| பிறப்பில் ஆயுள் எதிர்பார்க்கை (வருடங்கள்) | 71.1 | 74.8 | [2014] |
| வயது வந்தோரின் கல்வியறிவு (%) | 90.7 | 92.6 | [2015] |
| முன்பள்ளி மொத்த சேர்க்கை (%) | 107.0 | 101.0 | [2014] |
| குழந்தைகள் குறை ஊட்டம் (% 5 வயதுக்குக் கீழ்) | 22.8 | 26.3 | [2012] |
| வறுமைக் கோட்டிற்குக் கீழ் மக்கள்தொகை (%)[c] | 22.7 | 6.7 | [2012] |
| பாதுகாப்பான குடிநீருக்கான அணுகலுடனான மக்கள்தொகை (%) | | 95.6 | [2015] |
| சுகாதார வசதிகளுக்கான அணுகலுடனான மக்கள்தொகை (%) | | 95.1 | [2015] |

| சுற்றுச்சூழல் | | வருடம் |
|---|---|---|
| காபன் இரு ஒக்சைட்டு உமிழ்வு (தொன்கள்) | 16,025 | [2013] |
| தனிநபர் காபன் இரு ஒக்சைட்டு உமிழ்வு (தொன்களில்) | 0.8 | [2013] |
| வனப் பிரதேசம் (மில்லின் ஹெக்டேயரில்) | 2.1 | [2015] |
| நகர மக்கள்தொகை (% மொத்த மக்கள்தொகையில்) | 18.0 | [2015] |

| **ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு** (செயற்படு கடன்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி நிதிய ஆ.அ.நி. மானியங்கள்) | 31 திசெம்பர் 2016 அன்றிருந்தவாறு |
|---|---|
| கடன்களின் மொத்த எண்ணிக்கை | 55 |
| இறையாண்மை | 51 |
| இறையாண்மை அல்லாதவை[d] | 4 |
| மொத்த கடன் மற்றும் ஆ.அ.நி. மானிய தொகை ($ மில்லியன்)[e] | 3,716.1 |
| இறையாண்மை | 3,478.1 |
| இறையாண்மை அல்லாதவை | 238.0 |
| கடன் அளிப்புக்கள்[f] | |
| கடனளிப்புத் தொகை ($ மில்லின், 2016) | 342.7 |
| கடனளிப்பு விகிதம் (%) | 21.5 |

( ) = எதிர்மறை, [ ] = தரவு கிடைக்கக்கூடியதாக உள்ள பிந்திய வருடம், ஆ.அ.வ. = ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆ.அ.நி. = ஆசிய அபிவிருத்தி நிதியம், மொ.உ.உ. = மொத்த உள்நாட்டு உற்பத்தி, M2 = M2b உள்ளூர் வங்கி அலகுகள் மற்றும் கரைகடந்த இலங்கையில் இயங்குகின்ற அனுமதிப்பத்திரம்பெற்ற வணிக வங்க அலகுகள் தொடர்பான ஒன்றுசேர்க்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில்

[a] கொழும்பு நுகர்வோர் விலை சுட்டியின் அடிப்படையில்

[b] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியின் அடிப்படையில். இந்தப் புதிய சுட்டி ஒக்தோபர் 2015 இல் வெளியிடப்பட்டது.[c]

[c] 2011 விதிகளில் நாளொன்றிற்கு கொள்முதல் சக்தி சமநிலை $2.50 க்கு சமமானதாகும்.

[d] இரண்டு B- கடன்கள் உள்ளடங்கலாக.

[e] இடைவிலகல்கள் மற்றும் ரத்துச் செய்யப்பட்டனவற்றுள் தேறியது.

[f] இறையாண்மை கடனளிப்புகள்.

தகவல் மூலங்கள்: ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2016. http://www.cbsl.gov.lk/pics_n_docs/10_pub/_docs/efr/annual_report/AR2016/English/content.htm; இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்; மற்றும் உலக வங்கி. உலக அபிவிருத்தி குறிகாட்டிகள். http://databank.worldbank.org/data/reports.aspx?source=world-development-indicators

# I. நாட்டிற்கான கூட்டாண்மை மூலோபாயம் நிழற்பட நொடிப்பு

1. **முக்கிய அபிவிருத்திச் சவால்கள்**: கடந்த தசாப்தத்தின் வலுவான வளர்ச்சியுடன் (2007 – 2016), வருடாந்தம் சராசரியாக 6%, இலங்கை ஒரு மேல் நடுத்தர வருமான நாடு என்ற நிலையை நெருங்குகின்றது (மே.ந.வ.நா.). துரிதமான உள்ளடக்கிய நிலையான வளர்ச்சியின் உந்தம் மற்றும் மேல் நடுத்தர வருமான நாடு என்ற நிலையினைப் பேணுவது முக்கிய அபிவிருத்திச் சவாலாக உள்ளது. பொருளாதாரத்தின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் தளம் பன்முகப்படுத்தப்பட்டு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறைந்து வரும் ஏற்றுமதியின் போக்கு தலைகீழாக மாற்றப்பட வேண்டியுள்ளது. உள்நாட்டுச் சந்தையின் வரையறுக்கப்பட்ட அளவு நிலையான எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு கட்டுப்படுத்தும் காரணியாக இருக்கும் என்பதனால் இது அவசியமாக உள்ளது. வரையறுக்கப்பட்ட பொது வளங்களுடன், பொருளாதார மாற்றத்தைத் தனியார்த்துறை இயக்க வேண்டியிருக்கும். முதலீட்டு சூழலை மேம்படுத்துதல், வளர்ச்சி சார்ந்த உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல், மற்றும் மனித வளங்களின் தரத்தினை மேம்படுத்துதல் என்பன உள்நாட்டுத் தனியார் உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கும் உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டினை (வெ.நே.மு.) ஈர்ப்பதற்கும் அவசியமாக உள்ளது. வளர்ச்சியின் பன்முகத்தன்மையை உறுதி செய்வதற்கு, வறுமை மேலும் குறைக்கப்பட்டு, சமத்துவமின்மை ஒடுக்கப்பட்டு, மற்றும் சமன்செய்யப்பட்ட புவியியல் அபிவிருத்தி ஆதரிக்கப்பட வேண்டும். சுற்றுச்சூழல் நிலைபேற்றினைப் பேணுவதும் கூட ஒரு சவாலாக இருப்பதுடன் கவனிக்கப்பட வேண்டியுள்ளது.[1]

2. **ஆ.அ.வ. யின் மூலோப குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள்.** ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆ.அ.வ.), அதன் நாட்டு கூட்டாண்மை மூலோபாயம் (நா.கூ.மூ.), 2018-2022, இன் ஊடாக இலங்கையின் மே.ந.வ.நா. என்ற நிலை மாற்றத்திற்கு ஆதரவளிக்கும். இந்த நா.கூ.மூ. இரண்டு மூலோபாய குறிக்கோள்களில் கவனஞ் செலுத்தும்: பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடு ஆகியனவற்றின் பன்முகப்படுத்தலை மேம்படுத்துவதன் ஊடாக வளர்ச்சியின் இயக்கிகளை வலுப்படுத்தும் (தூண் 1), மற்றும் உள்ளடக்குந்தன்மையை மேம்படுத்துவதன் ஊடாக வளர்ச்சியின் தரத்தினை மேம்படுத்துதல் (தூண் 2). தூண் 1 இற்கான முன்னுரிமை முதலீட்டுப் பரப்புக்களாவன (i) வளர்ச்சி-சார்ந்த உள்கட்டமைப்பு (போக்குவரத்து, சக்தி, மற்றும் நகரம்) மற்றும் தளபாட உபகரணம் வழங்கப்படுவதனை விரிவாக்குதல்; (ii) பொருளாதார பாதை ஒன்றினை ஏற்படுத்துதல்; மற்றும் (iii) மனித மூலதனத்தினைத் தரமுயர்த்துதல் ஆக இருக்கும். தூண் 2 இற்கு, முன்னுரிமை முதலீட்டு பரப்புக்களாக (i) விவசாய உட்கட்டமைப்பினை வலுப்படுத்தி வர்த்தகமயப்படுத்துதல், (ii) கிராமப்புற இணைப்பினை மேம்படுத்துதல், (iii) பொது சேவைகள் விநியோகத்தினை மேம்படுத்துதல், மற்றும் (iv) சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிற்கான நிதிக்கான அணுகலை விரிவாக்குதல். முக்கிய கருப்பொருள் முன்னுரிமைகளாவன (i) தனியார்த்துறை வளர்ச்சி மற்றும் பொது-தனியார் கூட்டாண்மை மேம்படுத்தப்படல்; (ii) சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம், மற்றும் அனர்த்த இடர் முகாமைத்துவத்தினை வலுப்படுத்துதல்; மற்றும் (iii) பால் சமத்துவத்தினை மேம்படுத்துதல் என்பனவாக இருக்கும்.

3. **அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுடன் சீரமைத்தல். ஆ.அ.வ.** யின் உதவி (i) நவம்பர் 2015 மற்றும் ஒக்தோபர் 2016 இல் வெளியிடப்பட்ட பிரதம மந்திரியின் இரண்டு கொள்கை கூற்றுக்கள்; மற்றும் (ii) பொதுமக்கள் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், 2017-2020[2] ஆகியனவற்றில் விபரிக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி மூலோபாயத்துடன் நெருக்கமாக சீரமைக்கப்பட்டுள்ளது. நா.கூ.மூ. ஆ.அ.வ. யின் பெருநிறுவன மூலோபாயத்துடன், அதன் மூலோபாயம் 2020[3] இன் நடுத்தவணை மீளாய்வின் கீழ் இணங்கியுள்ளது.

4. **அணுகுமுறை மற்றும் பெறுமதி சேர்ப்பு.** அரசாங்கத்தின் வளர்ச்சிக்கான மாற்றமடைந்து வரும் தேவைகளுக்கு நெகிழ்வாக பதிலளிக்கும் அதேவேளை, ஆ.அ.வ. அது பலமான செயல்பாட்டு அனுபவத்தினைக் கொண்டிருக்கும் துறைகளில் முதலீட்டு நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்களைத் தொடர்வதுடன் ஒரு மே.ந.வ.நா. ற்கு பொருத்தமான சில புதிய பகுதிகளையும் ஆராயும். நாடு-பரந்த அறிவுப் பகிர்வு மற்றும் சிறந்த நடைமுறைகள் மற்றும் புதுமைகளை வெளிப்படுத்துதல் ஊக்குவிக்கப்படும். பொது மற்றும் தனியார்த்துறை செயல்பாடுகளுக்கு இடையே இணைத்தொழிற்பாடு வளர்க்கப்படும். மற்ற வளர்ச்சிப் பங்காளர்களின் முயற்சிகளுடன் மிகைநிரப்படுகின்றமை தொடரும். திட்டங்களின் செயல்படுத்தற் தயார்நிலையை உறுதிப்படுத்தி, உரிய காலத்தில் அபிவிருத்தியின் தாக்கத்தை வழங்குவதற்கு வசதியளிப்பதற்கு பயனுறுதியான மற்றும் வினைத்திறனான செயலாக்கத்திற்கு ஆதரவளிப்பதை ஆ.அ.வ. உறுதிசெய்யும்.

---

[1] உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி மதிப்பீடு (பிற் சேர்க்கை 3 இல் இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியலிலிருந்து அணுகமுடியும்.

[2] இலங்கை அரசாங்கம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு, தேசிய திட்டமிடல் திணைக்களம் 2017. 2017-2020 பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம். கொழும்பு.

[3] ஆ.அ.வ. 2014. மூலோபாயம் 2020 இன் நடுத்தவணை மீளாய்வு: ஒரு ஆசியா மற்றும் பசுபிக் மாற்றத்தின் சவால்களைச் சந்தித்தல். மணிலா.

## II. நாட்டின் அபிவிருத்திச் சூழல்

5. **வலுவான வளர்ச்சி மற்றும் கட்டமைப்பு மாற்றம்.** 2007-2016 காலப்பகுதியில் வருடாந்தம் பொருளாதார வளர்ச்சி சராசரியாக சுமார் 6%, 2016[4] ஆம் ஆண்டு இறுதியளவில் தனிநபர் மொ.உ.உ $3,835 உடன் இலங்கையை மே.ந.வ.நா. என்ற தகுதிநிலைக்கு நெருக்கமாக கொண்டு வந்தது. பொருளாதாரத்தின் கட்டமைப்பு ஒரு மாற்றத்திற்கு உட்பட்டது. விவசாயம் தற்பொழுது மொ.உ.உ. இன் வெறும் 8.2%, தொழிற்றுறை 29.6% (அதில் உற்பத்தி 16.9% ஆகவுள்ளது), மற்றும் சேவைகள் 62.2%.[5]

6. **வறுமை குறைக்கப்பட்டது, சமூக குறிகாட்டிகள் மேம்படுத்தப்பட்டன, மற்றும் அடிப்படை உள்கட்டுமானம் வழங்கப்பட்டது.** இலங்கை ஒரு குறைந்த-நடுத்தர வருமான நாடாக அதன் அபிவிருத்தினை பூர்த்திசெய்கின்றது. துரித பொருளாதார வளர்ச்சி, அரசாங்கத்தினால்-நிதியிடப்பட்ட கல்வி மற்றும் சுகாதார பராமரிப்பு முறைமையின் விரிவான பாதுகாப்புடன் கடுமையான வறுமையில் கணிசமான வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.[6] வறுமை விகிதம், நாளொன்றிற்கு $2.50 என்ற அடிப்படையில் (தேசிய வறுமை கோடு), 2006-2007 ஆம் ஆண்டுகளில் 15.2% இலிருந்து 2012-2013 ஆம் ஆண்டுகளில் 6.7% இற்கு சரிந்தது.[7] நாடு மில்லேனியம் வளர்ச்சி இலக்குகள்[8] தொடர்பில் கூட நல்ல முன்னேற்றத்தை எட்டியிருந்தது. இலங்கை 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில், 73 என்றதொரு தரத்துடன் (185 நாடுகளுள்), ஒரு உயர்ந்த மனித அபிவிருத்தி நாடு என வகைப்படுத்தப்பட்டு இருந்தது, அது உயர்ந்த தனி நபர் வருமான நாடுகளுடன் சாதகமான முறையில் ஒப்பிடப்படுகின்றது. அடிப்படை உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதில் இலங்கை வெற்றியடைந்துள்ளது. அது தெற்கு ஆசியாவிலேயே மிகவும் உயர்ந்த சாலை அடர்த்தியைக் கொண்டுள்ளது, மக்கள் தொகையில் 98% மின்சாரத்திற்கான அணுகலைக் கொண்டுள்ளனர், 96% பாதுகாப்பான குடிநீருக்கான அணுகலைக் கொண்டிருக்கின்றனர், மற்றும் 95% சுகாதார வசதிகளுக்கான அணுகலைக் கொண்டிருக்கின்றனர். இலங்கை உலகளாவிய போட்டித்திறன் சுட்டியில், 2016-2017[9], உட்கட்டமைப்பு அபிவிருத்திற்காக 73 வது (138 நாடுகளுள்) தரத்தில் உள்ளது.

7. **பிராந்திய போக்குவரத்து மற்றும் வர்த்தக இணைப்புக்கள்.** இலங்கை கிழக்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவுடன் ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கினை இணைக்கும் முக்கிய கடல் பாதை வழியே மூலோபாய ஸ்தானத்தில் அமைந்துள்ளது. கொழும்புத் துறைமுகம் கொள்கலன் போக்குவரத்தினைக் கையாள்வதற்கான பிராந்திய மையமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கம், பல்-துறைசார் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு, மற்றும் தெற்கு ஆசிய உப பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு (தெ.ஆ.உ.பொ.ஒ.) ஆகியனவற்றில் இலங்கையின் தீவிர பங்கேற்பு அயல் நாடுகள் மற்றும் ஏனைய ஆசிய நாடுகளுடன் இணைப்பினை ஏற்படுத்துவதில் உதவுகின்றது. ஆ.அ.வ. தெ.ஆ.உ.பொ.ஒ. நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பிராந்திய மற்றும் ஒருங்கிணைப்பு திட்டங்களுக்கு உதவியுள்ளது.

8. **பேரினப் பொருளாதார முகாமைத்துவ சவால்கள்:**

(i) **நிதி சமநிலை.** குறைந்த மற்றும் சரிந்துவரும் வரி-மொ.உ.உ விகிதம்[10] நிதி சமமின்மைகளின் அடிப்படைக் காரணங்களில் ஒன்றாகும். சரிந்துவரும் வரி-மொ.உ.உ. விகிதம் பல்வேறு காரணங்களினால் ஏற்படுகின்றது. மக்கள்தொகையில் ஒரு சிறிய சதவீதத்தினரே நேரடியான வரிகளைச் செலுத்துகின்றனர், மறைமுக வரிகள் ஒரு தற்காலிக முறையில் தீர்மானிக்கப்படுவதுடன் விருப்பு விதிவிலக்குகளுக்கு உட்பட்டிருகின்றன, மற்றும் வரி நிர்வாகம் திறமையற்றதாகவும் பலவீனமானதாகவும் உள்ளது. நிதிப் பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டுவரை உயர்வாக (மொ.உ.உ இன் 5% - 7%) இருந்தது. அரசாங்க வருமானம் மீள்நிகழ்வு செலவினங்களுக்குக் கூட போதுமானதாக இருக்கவில்லை. பொது முதலீடுகள் முற்றுமுழுதாக கடனால் நிதியிடப்பட்டு, தனியார்த்துறையின் கடனிற்கான அணுகல் நெருக்கடிக்கு

---

[4] உலக வங்கி ஒரு மேநவநா என்பதனை தனி நபர் வருமானம் $3,956 மற்றும் அதற்கு மேல் என வரையறுக்கின்றது.

[5] மொ.உ.உ. பங்குகள் காரணி செலவுடன் கணக்கிடப்படுகின்றன. விவசாயத்தின் மொ.உ.உ. யின் பங்கு மேநவநா இனது சாராசரியை விட குறைவானதாக உள்ள அதேவேளை தொழிற்றுறை அல்லது உற்பத்தியின் பங்கு குறைந்த நடுத்தர வருமான நாட்டின் சராசரிக்குச் சமமானதாக உள்ளது.

[6] வறுமை விகிதம், நாளொன்றிற்கு $1.90 அடிப்படையில் (2011 ஆம் ஆண்டு கொள்வனவுத்திறன் சமநிலையில்), 2006-2007 3.8% இலிருந்து 2012-2013 இல் 1.9% இற்கு சரிந்தது.

[7] வறுமை தலை எண்ணிக்கையைக் கணக்கிடும் தரக்குறி நாளொன்றிற்கு $3.10 இற்கு உயர்த்தப்பட்டால் (இது மேநவநா ற்கு மிகவும் பொருத்தமானது), உலக வங்கியின் கணிப்பீடுகள் இலங்கையில் வறுமை 2012-2013 ஆம் ஆண்டுகளில் 14.6% இற்கு இரட்டிப்பாகும் எனக் காட்டுகின்றன. இதன் பொருள், மக்கள் தொகையில் ஒரு கணிசமான அளவு சதவீதம் தேசிய வறுமை கோட்டிற்கு சற்று மேல், புறவெளிசார் அல்லது அகவாக்க பொருளாதார அதிர்ச்சி அல்லது இயற்கைப் பேரளிவு ஏற்படும் சந்தர்ப்பத்தில் வறுமையில் தள்ளப்படும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர்.

[8] 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குகளுடன் மொத்தம் 23 குறிகாட்டிகளில், 2014 ஆம் ஆண்டில் இருந்தவாறு, 10 எட்டப்பட்டன, 12 தடத்திலும், 2 தடத்திலிருந்து விலகியும் இருந்தன.

[9] உலக பொருளாதார மன்றம், 2016. உலகளாவிய போட்டித்திறன் அறிக்கை 2016-2017. ஜெனீவா.

[10] வரி-மொ.உ.உ. விகிதம் 2000 ஆம் ஆண்டில் 17.2% இலிருந்து 2016 ஆம் ஆண்டில் 13.6% ஒரு நிலையான சரிவாகக் காணப்பட்டிருந்தது.

உள்ளாக்கப்பட்டு பொதுக்கடன்[11] அதிகரித்தது. வட்டி மற்றும் உதவிப்படி கொடுப்பனவுகள் மீண்டும் வரும் செலவினங்களின், 2014-2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளின் மொ.உ.உ. இல் சுமார் 8%, பெரிய கூறாக உள்ளன, இது பொது முதலீடுகளை (மொ.உ.உ. இன் 5%) விடக் கணிசமான அளவு உயர்வாக இருந்தது. அதிகரித்துவரும் வரி-மொ.உ.உ. விகிதம், செலவினத்தினை நியாயப்படுத்துதல், மற்றும் அரச உடமை நிறுவனங்களை வர்த்தகமயப்படுத்துதல் என்பன நிதிப் பற்றாக்குறையை கட்டுப்படுத்துவதிலும் பொதுக் கடன்களைக் குறைப்பதிலும் முன்னுரிமைகளாக இருக்கின்றன.

(ii) **சென்மதி நிலுவை.** ஏற்றுமதி – மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2000 ஆம் ஆண்டில் 33% இலிருந்து 2016 ஆம் ஆண்டில் 13% ற்கு சரிந்தமையினால் சென்மதி நிலுவை அழுத்தத்தில் உள்ளது. ஏற்றுமதிகளால் தற்போது இறக்குமதிகளின் ஏறக்குறைய அரைவாசியை மாத்திரமே நிதியிடக் கூடியதாக உள்ளது, ஆனால் நடைமுறை சென்மதி நிலுவைக் கணக்கின் பற்றாக்குறை, பிரதானமாக உல்லாசப் பயணத்துறை மற்றும் அந்நியச் செலவாணி வருவாய் காரணமாக, மொ.உ.உ யின் 2.5% ற்கு கட்டுப்படுத்தப்படுகின்றது. வெளிநாட்டு நேரடி முதலீடு (வெ.நே.மு.) போன்ற கடன்-ஏற்படுத்தாத வருவாய்கள் முதலீட்டுக் கணக்கிற்கு, மொ.உ.உ யின் வெறும் 1% அளவிற்கு ஒரு சிறிய கையிருப்பை வழங்குகின்றது. உள்ளூர் முதலீட்டுச் சந்தை நிலைத்திருக்கக் கூடியதொரு அடிப்படையில் பிரிவு முதலீடுகளை ஈர்ப்பதற்கு போதுமான அளவு வளர்ச்சியடையவில்லை. வெளிநாட்டுச் செலவாணிக் கையிருப்புக்கள் குறைவாக உள்ளதுடன் 3-4 மாதங்கள் இறக்குமதி பாதுகாப்பினை மாத்திரமே வழங்குகின்றன.

(iii) **பேரினப்பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுத்தல்.** அரசாங்கம் பேரினப்பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க முயற்சிப்பதுடன் பல்தரப்பு மற்றும் இருதரப்பு நிறுவனங்களுடன் கொள்கைகளைச் சீரமைத்து நிறுவனங்களை வலுப்படுத்துவதற்காகப் பணியாற்றுகின்றது. சர்வதேச நாணய நிதியம் (ச.நா.நி.) ஜுன் 2016 இல் $1.5 பில்லியன் 3- வருட நீடிக்கப்பட்ட நிதி வசதி (நீ.நி.வ.) ஒன்றினை வழங்கியது. நீநிவ இன் பிரதான கூறுகள் நிதி ஒருங்கிணைப்பு, வருவாய் திரட்டலை மேம்படுத்தல், பொது நிதி முகாமைத்துவத்தினை வலுப்படுத்துதல், அரச உடமை நிறுவனங்களின் சீர்திருத்தம், நிதியல் கொள்கை செயல்திறனை மேம்படுத்தல், மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கையின் சீர்திருத்தம் என்பனவாகும். உலக வங்கி அபிவிருத்தி கொள்கை கடன் ஒன்றின் கீழ், தனியார்த்துறையின் போட்டித்தன்மையை அதிகரிப்பது, வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுத் துறை முகாமைத்துவத்தை மேம்படுத்துவது, மற்றும் நிதி நிலைபேறான நிலையை மேம்படுத்துவது என்பனவற்றின் சீர்திருத்தங்களை ஆதரிக்கின்றது. அபிவிருத்தி கொள்கை கடன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் (ஜ.ச.ஒ.நி.) சமாந்தர இணை நிதியிடல் ஊடாக ஆதரிக்கப்படுகின்றது. தனியார்த் துறை விரிவாக்கத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து வளங்களை ஈர்ப்பதற்கு மூலதனச் சந்தையை சீர்திருத்துவதில் ஆ.அ.வ. உதவி வருகின்றது.

9. **அபிவிருத்தி சவால்கள்.** இலங்கை அதன் மே.ந.வ.நா. என்ற அதன் தகுதிநிலையை முன்நோக்கி நகர்த்துவதற்கு வளர்ச்சி உந்தத்தை பேணவேண்டி இருக்கின்றது. இந்த சவாலைச் சமாளிப்பதற்கு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல், உற்பத்தித்திறன் அதிகரித்தல், இலங்கை நிறுவனங்களை பூகோள விநியோக சங்கிலியின் பகுதியாக ஆக்குதல், மற்றும் ஆக்கபூர்வமான தொழில்களை உருவாக்குதல் என்பனவற்றிற்கு வசதியளிக்கும் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும். சிறிய அளவிலான உள்நாட்டுச் சந்தை (சுமார் 21 மில்லியன் மக்கள்தொகை) ஏற்றுமதி வளர்ச்சியின் முக்கிய ஆதாரமாக இருக்கும் என்பதனை உணர்த்துகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட நிதி வெளிகளுடன், தனியார்த் துறை பொருளாதார மாற்றத்தினை தனியார்த்துறை இயக்க வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அதற்கிணங்க, தனியார்த் துறையின் வளர்ச்சிக்கான இடையூறுகள் ஒரு முன்னுரிமை அடிப்படையில் எதிர்கொள்ளப்பட வேண்டும். வளர்ச்சியின் உள்ளடக்குந்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு, சமத்துவமின்மை ஒடுக்கப்படல், மீதமுள்ள வறுமையைக் குறைத்தல், மற்றும் புவியியல் ரீதியாக சமன்செய்யபட்ட அபிவிருத்தி என்பன தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியது முக்கியமானதாக இருக்கின்றது. மேலும், மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாதவிடத்து துரித வளர்ச்சி மற்றும் அதிக நுகர்வு சுற்றுச்சூழலில் ஒரு சுமையைச் சேர்க்கக் கூடும். ஆகையால், சுற்றுச்சூழல் நிலைபேறு தொடர்பில் நெருக்கமாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(i) **ஏற்றுமதிக்கு பன்முகப்படுத்தப்பட்ட பொருட்கள் இல்லாமை, உலகளாவிய விநியோக சங்கிலியுடனான நலிவான தொடர்பு.** உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்தமை (அது மே 2009 இல் முடிவடைந்தது) மற்றும் 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார சரிவு காரணமாக வர்த்தக தாராளமயமாக்கல் உந்தம் இழக்கப்பட ஏற்றுமதிகள் கட்டுப்படுத்தப்பட்டன. நிதி நிலைமைகள் மோசமைந்ததுடன், நடப்பிலுள்ள சுங்கக் கட்டணங்களுக்கு மேல் தற்காலிக முறையில் மாறும் விகிதங்களில் மேலதிக கட்டணங்கள் விதிக்கப்பட்டன. ஏற்றுமதியுடன் ஒப்பிடும்போது உள்நாட்டுச் சந்தைக்காக பயனுறுதியான பாதுகாப்புடன்

---

[11] அரசாங்கக் கடன் 2001-2004 ஆம் ஆண்டுகளில் மொ.உ.உ. யின் 100% ற்கு மேலாகவிருந்து 2014 ஆம் ஆண்டில் 71% ஆக வீழ்ச்சியடைந்தது, ஆனால் 2016 ஆம் ஆண்டில் மொ.உ.உ. யின் 79% ற்கு அதிகரித்தது. நிதிப் பற்றாக்குறையின் நிதியிடல் வெளிநாட்டு வளங்களில் தங்கியிருக்கும் நிலை, வணிகக் கடன்களின் ஒரு உயர்ந்த கூறுடன், அதிகரித்து வருகின்றது.

உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் அதிக லாபகரமானது. இந்தக் கொள்கைகளின் தாக்கம் உலகளாவிய ஏற்றுமதிகளில் இலங்கையின் பங்கு சரிவடைவதாக உள்ளது.[12] ஏற்றுமதிகளின் கலவை பன்முகப்படுத்தப்பட்டிராததுடன், மொத்த ஏற்றுமதியில் 65% காரணமாகவிருக்கும் மூன்று விடயங்களில் (ஆடைகள், தேயிலை மற்றும் ரப்பர் உற்பத்திகள்) செறிவாக்கப்பட்டுள்ளது. ஆடை உற்பத்தித்துறையைத் தவிர உலகளாவிய விநியோக சங்கிலியில் சிறிது ஒருங்கிணைப்பு அடையப்பட்டுள்ளது, அது கூட பெறுமதி சேர்க்கப்படுவதன் அடிப்படையில் கீழ் அந்தத்தில் உள்ளது.

(ii) **வியாபார சூழலுக்கு முன்னேற்றம் தேவை.** தனியார்த் துறை முதலீடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது ஏனெனில் வியாபாரச் சூழல் உகந்ததாக இருக்கவில்லை அத்துடன் கடந்த காலத்தில் பொதுத் துறை ஒரு மேலாதிக்க வகிபாகத்தைச் செலுத்தியிருந்தது. அரசாங்கத்தின் பாதீட்டு வளங்கள் வரையறுக்கப்பட்டு இருப்பதனால், தனியார்த் துறை பொ.த.கூ. களின் ஊடாக உள்கட்டமைப்பு அபிவிருத்தியில் ஒரு பெரிய வகிபாகத்தை வகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முதலீட்டு சூழலை முன்னேற்றுவதற்கான கொள்கைகள், உள்கட்டுமானம் மற்றும் மனித வளங்களின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் மிகைநிரப்பப்பட்டு உள்நாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை (வெ.நே.மு.) ஈர்ப்பதற்கும் அவசர கவனம் தேவையாக உள்ளது.

(iii) **சமத்துவமின்மை உள்ளது.** சமத்துவமின்மை அதன் பல்வேறு தோற்றங்களில் தொடர்கின்றது. குடும்ப வருமானத்தின் கினி குணகம் 0.48 அளவில் இருந்ததுடன் 2007 ஆம் ஆண்டிலிருந்து குடும்ப செலவினம் 0.40 அளவில் இருந்தது. வருவாய் பங்கின் கீழ் இரண்டு பதின்மானங்கள் 1995-1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4.8% இலிருந்து 2012-2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4.5% ற்கு குறிப்பிடத்தக்க அளவிற்குச் சரிந்த அதேவேளை, மேல் இரண்டு பதின்மானங்களும் 51.3% இலிருந்து 52.9% ற்கு அதிகரித்தது. சமத்துவமின்மையை சீர்கெடச் செய்யும் முக்கிய காரணி துறைகளில் உற்பத்தித்திறனில் உள்ள வேறுபாடாகும். மொ.உ.உ. இல் விவசாயத்தின் பங்கு வெறும் 8.2% ஆக உள்ளது, ஆனால் அது தொழிலாளர் படையின் 29% ற்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்றமை, துறையில் குறைந்த தொழில் உற்பத்தித்திறனை குறிக்கின்றது. தொழிற்றுறை மற்றும் சேவைகளில் உயர்- ஊதியம் உற்பத்தி செய்யும் தொழில்கள் செறிவாக்கப்பட்டுள்ளன.[13] வறுமையில் புவியியல் ரீதியாக கூட மாறுபாடுகள் இருக்கின்றன, ஒப்பீட்டளவில் தோட்ட பிரதேசங்களில்[14] உயர்வாக (10.9%) இருந்து வருவதுடன் கிராமப் பிரதேசங்கள் (7.6%), மற்றும் நகரப்புறங்களில் (2.1%) குறைவாக உள்ளது. வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில மாவட்டங்களில் வறுமையை இன்னும் அதிகமாக, 19%-29% இல், கொண்டுள்ளது, தொழிலாளர் சந்தைகளுக்கான பலவீனமான தொடர்பு மற்றும் சேவைகளுக்கான அணுகல் காரணமானதாகும். கல்வி மற்றும் பிற சுகாதார சுட்டிகளின் அனைத்து மட்டங்களிலும் சமநிலையை அடைவதில் முன்னேற்றம் ஊக்கமளிப்பதாக இருந்த போதிலும், விவசாயத்திற்கு வெளியே ஊதிய வேலைவாய்ப்பில் பெண்களின் பங்கேற்பு குறைவாகவே உள்ளது. பெண்களின் தொழிலாளர் படை பங்கேற்பு விகிதம் (தொ.ப.ப.வி.) ஆண்களினதை விட அரைவாசி குறைவாக உள்ளது (தொ.ப.ப.வி. ஆண்களுக்கு 74.9% மற்றும் பெண்களுக்கு 35.6%).

(iv) **சுற்றுச்சூழல் நிலைபேறு, காலநிலை மாற்றம், மற்றும் அனர்த்த இடர்**. நாடு காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகள் காரணமாக, குறிப்பாக மழைவீழ்ச்சியின் ஏற்ற இறக்கங்கள் காரணமாக, பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நிலையில் உள்ளது. சில பிரதேசங்கள் திடீர் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகின்ற அதேவேளை ஏனைய பிரதேசங்களில் வரட்சி நிலவுகின்றது. சுற்றுச்சூழல் முகாமைத்துவம் மற்றும் அனர்த்த நிகழ்வுகள் இணைக்கப்பட்டுள்ளன. திட்டமிடப்படாத நகரமயமாக்கல் மற்றும் கரையோரப் பிரதேசங்களின் சீரழிவுகள் காரணமாக நாடு மாசடைதல் சவால்களையும் கூட எதிர்நோக்கியுள்ளது.

---

[12] உலகளாவிய ஏற்றுமதிகளின் பங்கு 2000-2004 ஆம் ஆண்டுகளில் 0.074% இலிருந்து 2010-2014 ஆம் ஆண்டுகளில் 0.057% சரிவடைந்தமை, ஒரு 23% சரிவாகும். G. Lopez-Acevedo, D. Medvedev, and V. Palmade, eds. 2017. *South Asia's Turn: Policies to Boost Competitiveness and Create the Next Export Pwerhouse. Washington, DC. World Bank.* https://openknowledge.worldbank.org/bitstream/handle/10986/25094/9781464809736.pdf

[13] தொழிலாளர் உற்பத்தித்திறன், ஒரு மணிநேரம் செய்யபட்ட வேலைக்கான ஊதியத்தின் ஊடாக அளவிடப்பட்டவாறு, 2016 ஆம் ஆண்டில் விவசாயத்துடன் ஒப்பிடும்போது தொழிற்றுறையில் 2.89 மடங்கு அதிகமாகவும் சேவைகளில் 3.23 மடங்கு அதிகமாகவும் உள்ளது. இலங்கை மத்திய வங்கி. 2016. ஆண்டறிக்கை 2016. கொழும்பு (அட்டவணை 4.16)

[14] தோட்டப் பிரதேசங்கள் 8 ஹெட்டேயர்களை விட அதிக பரப்பளவினைக் கொண்ட பெருந்தோட்டங்கள், மற்றும் 10 விடக் குறைவான வதிவிட தொழிலாளர்களைக் குறிக்கின்றது.

## III. நாட்டிற்கான மூலோபாயக் கட்டமைப்பு

### அ. முன்னைய மூலோபாயத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

10. இலங்கைக்கான நாட்டு உதவி நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு[15], 2006 ஆம் ஆண்டில், 2006-2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கான ஆ.அ.வ. யின் ஒட்டுமொத்த உதவி வெற்றிகரமானது என மதிப்பிடப்பட்டது. ஆ.அ.வ. யின் செயல்பாடுகள், அனைத்துத் துறைகளிலும் பயனுறுதியாக, செயற்பாட்டில் வினைத்திறனாக, அபிவிருத்தித் தாக்கத்தில் திருப்திகரமானதாக, மற்றும் நிலைபேற்றின் அடிப்படையில் சாத்தியம் குறைந்ததாகவும் நாட்டின் தேவைகளுக்குப் பொருத்தமானதாகவும் இருந்தன. புதிய நா.கூ.மூ. ற்காக நான்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன: (i) அரச உடைமையான நிறுவனங்களின் மறுசீரமைப்பு உள்ளடங்கலாக, உள்கட்டுமானத் துறையில் கொள்கை உரையாடல் தீவிரப்படுத்தப்பட வேண்டும்; (ii) உள்ளடக்கிய வளர்ச்சி தொடர்பான மூலோபாயம் ஒரு தெரிவுசெய்யப்பட்டதன் அடிப்படையில் சமூகம்-சார்ந்த திட்டங்களின் வெற்றி மீது வரையப்பட வேண்டும். (iii) தனியார்த் துறை அபிவிருத்திற்கு ஆதரவளிப்பதற்கு, முதலீட்டு சூழல் தொடர்பான பணி, பொது முதலீடு மற்றும் தனியார்த்துறை செயல்பாடுகள் இடையே சிறந்த கூட்டுவிளைவை ஏற்படுத்தும், ஒரு தெளிவான அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும்; மற்றும் (iv) கல்வித் துறைக்கான உதவிகள் விரிவாக்கப்பட வேண்டும்.

11. நா.கூ.மூ. அதன் செயல்பாட்டு தலையீடுகள் ஊடாக இந்த மூன்று பரிந்துரைகளையும் செயல்படுத்தும். ஆ.அ.வ. அதன் தலையீடுகளின் நிலைபேற்றினை மேலும் ஒழுங்கான மற்றும் ஒருமுகப்படுத்திய கொள்கை உரையாடல்களின் ஊடாக மேம்படுத்தும். உள்கட்டமைப்பின் நிலைபேறு பொருத்தமான நிறுவனங்களின் செயல்திறனை வலுப்படுத்துவதன் மூலம் மேம்படுத்தப்படும். ஆ.அ.வ. யின் தலையீடுகளில் சமூகங்களை ஈடுபடுத்துதல், பொருத்தமானவிடத்து, மற்ற ஈடுபாட்டினை மிகைநிரப்புதல் என்பன ஊடாக உள்ளடக்குந்திறன் பலப்படுத்தப்படும். தனியார்த்துறை வளர்ச்சி, பொது மற்றும் தனியார்த்துறை செயல்பாடுகளுக்கு இடையே வலுவான கூட்டுவிளைவுடன், ஒரு முழுமையான அணுகுமுறையைப் பின்பற்றும். முதலீட்டு சூழலை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் மற்றும் பிற வளர்ச்சிப் பங்காளர்களுடன் ஆ.அ.வ. நெருக்கமாகப் பணியாற்றுவதுடன் பொ.த.கூ. அல்லது வேறு நடைமுறைகளைப் பயன்படுத்தி தனியார்த்துறை தலைமையிலான முதலீடுகள் தொடர்ந்தும் ஆராயப்படும். கல்வித் துறையிலான செயல்பாடுகள் ஆ.அ.வ. யின் முன்மொழியப்பட்ட மூன்றாம்நிலை துறையின் ஈடுபாட்டுடன் விரிவாக்கப்படும்.

### ஆ. தேசிய அபிவிருத்தி மூலோபாயம்

12. **முக்கிய அபிவிருத்தி இலக்குகள்.** அபிவிருத்தி மூலோபாயத்தின் முக்கிய கூறுகள் நவம்பர் 2015 மற்றும் ஒக்தோபர் 2016 இல் பாராளுமன்றத்தில் பிரதம மந்திரியின் கொள்கை விளக்க அறிக்கையில் விபரிக்கப்படுகின்றன. அரசாங்கத்தின் நீண்ட கால இலக்குகள் (i) 1 மில்லியன் வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்; (ii) வருமான மட்டங்களை மேம்படுத்தல்; (iii) கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்; (iv) கிராமிய மற்றும் தோட்டத் தொழிற்றுறைகள், நடுத்தர வர்க்கம், மற்றும் அரச ஊழியர்களுக்கு நில உடமையை உறுதிப்படுத்துதல்; மற்றும் (v) பரந்த மற்றும் பலமான நடுத்தர வர்க்கத்தை உருவாக்குதல்.

13. **அபிவிருத்தி மூலோபாயம்.** பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், 2017-2020 முன்னுரிமை பரப்புக்களுக்கு அரசாங்கத்தின் வளங்களை ஒதுக்குவது பற்றிய விபரங்கள், அத்துடன் இடைக்கால இலக்குகளை வழங்குகின்றது. இலக்குகளாவன (i) உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையை மேம்படுத்துவதன் ஊடாக ஏற்றுமதியின் சரிவைக் கட்டுப்படுத்துவது, (ii) முதலீட்டாளர்-நட்புக் கொள்கைகள் ஊடாக வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், (iii) அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்து அரசாங்கத்தின் செலவினங்களை நியாயப்படுத்துவதற்கு சீர்திருத்தங்களைத் தொடருதல், (iv) பொதுக் கடனை மறுசீரமைத்து வருடாந்த கடன் சேவை சுமையைக் குறைத்தல், (v) மனித வளங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கு அரசாங்க செலவினத்தை அதிகரித்தல், (vi) பொருளாதார மற்றும் சமூகத் துறைகளில் சமத்துவத்தை ஊக்குவித்தல், (vii) பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வறுமை இடைவெளிகளைக் இழிவாக்குதல், மற்றும் (viii) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்புத் தொடர்பில் சிறப்பு வலியுறுத்தல் வழங்குதல் என்பனவாகும். நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை எதிர்கால அபிவிருத்திக்கான வழிகாட்டி கொள்கைகளாக பின்பற்றுவதன் மூலம் நிலைபேறான வளர்ச்சி தொடரப்படும். ஆளுகையின் தரம் வலுவூட்டப்படும்.

14. இலங்கை உற்பத்திப் பொருட்களுக்கு உள்ளாற்றலுள்ள சந்தைகளை வழங்கும் நாடுகளுடன் அரசாங்கம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் (சு.வ.உ.) மற்றும் இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை கொண்டுள்ளது.[16] அதன் மூலோபாயம், மூலோபாய பொது மற்றும் தனியார்த்துறை முதலீடுகளைத் தொடருவதன் மூலம் துறைகள் பூராகவும் உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல், மனித மூலதனத்தை மேம்படுத்துதல்,

---

[15] ஆ.அ.வ. 2016. நாட்டு உதவி நிகழ்ச்சித்திட்ட மதிப்பீடு, இலங்கை, 2006-2015. மணிலா.

[16] அரசாங்கம் தற்போது மக்கள் சீனக் குடியரசு, சிங்கப்பூர், துருக்கி மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகளுக்காக கலந்துரையாடி வருகின்றது. இந்தியாவுடனான சுவஉ பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றிற்கு தரமுயர்த்துவதற்காக கலந்துரையாடப்படுகின்றது.

நிறுவனம்சார் கட்டமைப்பினை வலுவூட்டுதல், மற்றும் இலங்கையை ஒரு அறிவுப் பொருளாதாரமாக மாற்றுதல் என்பனவற்றில் ஏற்றுமதி-சார்ந்த வளர்ச்சி முக்கியமாகத் தங்கியிருப்பதனை ஏற்றுக்கொள்கின்றது. பொருளாதார வளர்ச்சியின் உள்ளடக்குந்திறன், குறிப்பாக, வளர்சியின் நன்மைகள் மக்களுக்கு கிடைக்கும் வகையில், நிலவும் சமத்துவமின்மையை குறைப்பதன் மூலம் ஒரே நேரத்தில் ஊக்குவிக்கப்படும்.

15. தனியார்த் துறை பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்களிப்பினைச் செய்வதோடு ஆக்கபூர்வமான தொழில்களை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கத்தின் வகிபாகம் வியாபார சூழலை முன்னேற்றுதல் மற்றும் முக்கிய பொருளாதார மற்றும் சமூகத் திட்டங்களுக்கு நிதியளிப்பதாக இருக்கும். தனியார்த் துறையின் வளர்ச்சியைத் தடுப்பதில் உள்ள தடைகளை எதிர்கொண்டு, பூகோள பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதில் ஆதரவளிக்கப்படும். மேற்கு பிராந்திய பெருநகரப் பெருந்திட்டம் பொருளாதாரம் மற்றும் நகர ஒருங்கிணைப்புகளின் புவியியல் மாற்றத்துடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு மேல் மாகாணத்தினைக் கவர்ச்சிகரமானதாக்கும் ஒரு கருத்தியல் மூலோபாயத்தினை வழங்குகின்றது.[17] எண்ணியல் பொருளாதாரம், சுற்றுலா, மற்றும் வர்த்தக வேளாண்மை ஆகியனவற்றை விரிவாக்குவதற்கு அழுத்தம் கொடுக்கப்படும். சந்தையின் தேவைகளுடன் உயர் கல்வி மற்றும் திறன்கள் மேம்பாடு மீள அளவீடு செய்யப்படும். பெண்களின் தொபபவி அதிகரிப்பதற்கு வாய்ப்புக்களும் உருவாக்கப்படும்.

16. அரசாங்கம் காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்தல் மற்றும் இசைவாக்கமடைதல் என முன்னுரிமைகளை அடையாளம் காண்பதுடன், அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் ஒரு தேசிய கொள்கையை உருவாக்கி உள்ளது. இலங்கையின் தேசியரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு பச்சை வீட்டு வாயு உழிழ்வினை (i) சக்தித் துறையில் 20%; மற்றும் (ii) போக்குவரத்து, கழிவு, தொழிற்றுறை, மற்றும் வனத் துறைகளில் 2030 ஆம் ஆண்டளவில் 10% இனால் குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. மனித சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு, நீர் மற்றும் நீர்பாசனம், கரையோர மற்றும் கடல் பிரதேசங்கள், பல்லுயிரியல், நகர உட்கட்டுமானம், மற்றும் சுற்றுலாத்துறை ஆகியனவற்றின் அடிப்படையில் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய சமூகங்கள், துறைகள் மற்றும் பிரதேசங்களில் காலநிலை மாற்றத்திற்கு எதிரான மீண்டெழும் சக்தியைக் கட்டியெழுப்புவதனையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

**இ. அபிவிருத்திப் பங்காளர்களின் வகிபாகம்**

**17. அபிவிருத்தி உதவி சூழ்நிலை.** நா.கூ.மூ. 2018-2022 காலப்பகுதியில், உட்கட்டமைப்பு முதலீட்டுத் தேவைகள் அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சி இலக்கினை அடைவதற்கு வருடத்திற்கு $5 பில்லியன் - $6 பில்லியன் ஆக இருக்குமென மதிப்பிடப்படுகின்றது. உட்கட்டமைப்பு முதலீடுகளை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் திறன் தற்சமயம் ஒரு சிக்கலான நிதி நிலைமையினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், நிதி வெளி தொடரும் ச.நா.நி. நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான சீர்திருத்தத்துடன் முன்னேறும் சாத்தியம் உள்ளது.[18] 2017 ஜுலை தொடக்கம் உலக வங்கியிலிருந்து சலுகை கடன் பெறுவதிலிருந்து இலங்கை நுண்படிவாக்கம் பெறும். இது நாட்டிற்கு கடனை-ஏற்படுத்தாத வருவாய்களை ஈர்ப்பது, நீண்டகால அதிக தொகை நிதியினை, பொதுவாக குறைந்த வட்டி வீதத்தில், உத்தியோகபூர்வ மூலங்களிலிருந்து கடன் பெறுவது, வர்த்தக வெளிநாட்டு கடன்களை ஒரு நியாயமான முறையில் பயன்படுத்துதல், மற்றும் கடன் சேவைத்திறனை மேம்படுத்துதல் என்பனவற்றினைத் தவிர்க்க முடியாததாக்கும். மேலும், முதலீட்டுச் சூழல் மேம்பட்டு, பொ.த.கூ. திட்டங்களை மேற்கொள்வதற்கான திறன் உருவாகுகின்ற போது, காலப்போக்கில் தனியார்த் துறைப் பங்கேற்பு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

18. **கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பிற்கான பகுதிகள்.** ஒரு தீவிர அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மன்றம் காலாண்டுக்கு ஒரு முறை கூடுவதுடன் ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் உள்ளடங்கலாக பிரதான இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களின் பங்கேற்பினைக் கொண்டுள்ளது. இந்த மன்றம் பிரச்சினைகள் பற்றி மையப்படுத்திய விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்வதனை இயலச் செய்வதற்கு குறிப்பிட்ட துறைகள் தொடர்பில் தொழில்நுட்பக் குழுக்களை ஏற்படுத்தியது. போக்குவரத்து, சக்தி, நகரம், கல்வி, விவசாயம், சுகாதாரம், மற்றும் நிதித் துறைகளில் ஆ.அ.வ. உலக வங்கியுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து இருந்தது. ச.நா.நி. முன்னிலை எடுத்துக் கொண்டதுடன், உலக வங்கி மற்றும் ஜ.ச.ஒ.நி. உடன் பேரினப் பொருளியல் சீர்திருத்தங்கள் தொடர்பாக ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டாண்மைகள்: (i) உட்கட்டுமான துறை தொடர்பில் ஜ.ச.ஒ.நி., (ii) நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் தொடர்பில் ஐரோப்பிய முதலீட்டு வங்கி மற்றும் *Agence Française de Développement* (பிரெஞ்சு அபிவிருத்தி நிறுவனம்); (iii) கல்வி மற்றும் தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பில் (தொ.தொ.க.ப.) ஆஸ்திரேலிய அரசாங்கம், கனேடிய அரசாங்கம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான

---

[17] இலங்கை அரசாங்கம், பெருநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு. 2016. மேற்கு பிராந்திய பெருநகரங்கள் பெருந் திட்டம் 2030. கொழும்பு.

[18] சநாநி இன் கடன் நிலைபேற்றுத்திறன் பகுப்பாய்வு, நீநிவ சீர்திருத்தத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற போது, கடன் குறிகாட்டிகள் சீராக நிர்வகிக்கக்கூடிய மட்டத்தினை அடையும், இருந்தபோதும் சார்ந்த பொறுப்புக்கள் மற்றும் கடன் நிலைபேறு தொடர்பான எதிர்மறை அபாயங்கள் உள்ளன.

ஜேர்மன் சங்கம் (*Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit*); (iv) பொது நிதி முகாமைத்துவத்தில் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க அரசு நிறுவனம்; (v) சமூகத் துறைகளில் ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனம்; மற்றும் (vi) விவசாயம், இயற்கை வளங்கள், மற்றும் கிராமிய அபிவிருத்தித் துறைகளில் ஆசிய உட்கட்டுமான முதலீட்டு வங்கி ஆகிய நிறுவனங்களுடனும் தொடரப்படும். கணக்கியல், கணக்காய்வு, கொள்வனவு, மற்றும் பாதுகாப்புக்களுக்காக நாட்டு முறைமைகளைப் பயன்படுத்துவதற்காக இணக்கமான அணுகுமுறையைப் பின்பற்றுவதில் ஆ.அ.வ. அபிவிருத்திப் பங்காளர்களுடனும் ஒருங்கிணைகின்றது. கொள்கை உரையாடல், செயற்படுத்தல் ஏற்பாடுகள், திறன் மேம்பாடு, மற்றும் கண்காணிப்பு மற்றும் மீளாய்வில் ஒரு தீவிரமான ஒருங்கிணைந்த அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது.[19]

**ஈ. ஆ.அ.வ. இன் மூலோபாய மற்றும் கருப்பொருள்சார் குறிக்கோள்கள் மற்றும் செயல்பாட்டு முன்னுரிமைகள்**

19. **நாட்டிற்கான கூட்டாண்மை மூலோபாய குறிக்கோள்கள்.** ஆ.அ.வ. இலங்கையின் ஒரு மே.ந.வ.நா. என்ற அந்தஸ்திற்கான மாற்றத்திற்கு நா.கூ.மு. ஐ பின்வரும் இரண்டு மூலோபாயக் குறிக்கோள்கள் தொடர்பில் மையப்படுத்துவதன் மூலம் ஆதரிக்கும்: (i) பொருளாதார நடவடிக்கைகளின் பன்முகப்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டினை ஊக்குவித்தல் (தூண் 1); மற்றும் (ii) உள்ளடக்குந்தன்மை மற்றும் கருப்பொருள்சார் குறிக்கோள்களை ஊக்குவிப்பதன் மூலம் வளர்ச்சியின் தரத்தினை மேம்படுத்துதல் (தூண் 2).[20] இந்த நா.கூ.மூ. பொருளதார வளர்ச்சியின் பேண்தகுதன்மையை கொள்கை மற்றும் திட்டம் இரண்டிலும் மற்றும் / அல்லது நிகழ்ச்சித்திட்ட மட்டங்களில் கவனத்தில் கொள்ளும். உருவாகிவரும் நாட்டின் தேவைகளைப் பொறுத்து, இந்தக் குறிக்கோள்களை ஒரு நெகிழ்வான முறையில் அடைவதற்கான தடைகளை எதிர்கொள்ள உதவும். தூண்கள் 1 மற்றும் 2 இன் கீழான ஆ.அ.வ. யின் தலையீடுகள் அரசாங்கத்தின் முக்கிய அபிவிருத்தி இலக்குகளான தொழில் உருவாக்கம், வருமான மட்டத்தை உயர்த்துதல், மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தல் என்பனவற்றிற்குப் பங்களிப்புச் செய்யும்.

20. **ஆ.அ.வ. யின் அணுகுமுறை.** ஆ.அ.வ. நடைபெற்றுக்கொண்டிருக்கும் நாடு கண்டறிதல் ஆய்வு (நா.க.ஆ.) மற்றும் பல்துறை பொருளாதார பாதை அபிவிருத்தி ஆய்வு ஆகியவற்றின் கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு காலப்போக்கில் தலையீட்டின் பகுதிகள் சரிசெய்யப்படும். இந்த நா.க.ஆ. இலங்கையின் எதிர்கால அபிவிருத்தியில் பொருளாதாரம் மற்றும் அடையாளம் காணப்பட்ட முட்டுக்கட்டைகள் தொடர்பில் விரிவான மீளாய்வினை மேற்கொண்டுள்ளது. பொருளாதாரப் பாதை ஆய்வு, வளர்ச்சி மையங்களை உருவாக்குவதனை மையப்படுத்தி, துறைகளிடையே வளர்ச்சி-ஊக்குவிப்புத் தலையீடுகளின் ஒருங்கிணைப்பினை ஆராய்கின்றது. ஒரு "ஒரு ஆ.அ.வ." அணுகுமுறை அறிவு முகாமைத்துவம் மற்றும் திணைக்களங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பில் எடுக்கப்படும். ஆ.அ.வ. யின் இலங்கை வதிவிடப் பணிமனை ஆ.அ.வ. யினால் இலங்கை தொடர்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து அறிவுப் பணிகளின் காப்பாளராகப் பணியாற்றுவதுடன், தேவைகளைப் பொறுத்து அரசாங்கத்தின் அறிவுத் தேவைகளுக்குப் பதிலளிக்கும். தலையீடுகள் சிக்கலான பொருளாதார சவால்களின் தேவைகளைச் சந்திப்பதற்கு கொள்கை சீர்திருத்தங்கள், அறிவுத் தீர்வுகளை வழங்குதல், மற்றும் நிறுவனம்சார் திறன்களை மேம்படுத்துதல் என்பன தொடர்பில் அதிக கவனம் செலுத்தும். ஆ.அ.வ. யின் இலங்கை வதிவிடப் பணிமனை கூட்டுவிளைவினை உச்சமாக்குவதற்கு ஆ.அ.வ. யின் இறையாண்மை மற்றும் இறையாண்மையற்ற செயல்பாடுகளை தொடர்ந்து தீவிரமாக ஒருங்கிணைக்கும். ஆ.அ.வ. யின் ஆதரவு அதன் ஒப்பீட்டு அனுகூலம், கடந்தகால ஈடுபாடுகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள், மற்றும் செயல்படுத்தற் திறன் என்பனவற்றினைக் கருத்திலெடுத்து வடிவமைக்கப்படும்; மற்றும் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களின் முயற்சிகளை மிகைநிரப்பும்.

21. ஆ.அ.வ. அதன் செயல்பாடுகளின் செயல்திறனை அதிகரிப்பதற்கு மிகவும் பொருத்தமான கடன் கருவிகள் மற்றும் முறைகளைப் பயன்படுத்தும். தேவைகளைப் பொறுத்து, ஆதரவு இறையாண்மையற்ற கடன், கொள்கை-அடிப்படைக் கடன்கள், முடிவு-சார்ந்த கடன்கள், மற்றும் பல்தவணை நிதியிடல் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்க முடியும். அரச உடமை நிறுவனங்களுக்கான நேரடிக் கடன் கூட, அவர்களுடைய ஆளுகை தரங்கள் மற்றும் நிதி முகாமைத்துவத் திறன்களின் மேம்பாடுகளைப் பொறுத்துப் பரிசீலிக்கப்பட முடியும். முடிவு-சார்ந்த கடன்கள் கல்வித் துறையில் பயன்படுத்தலாம். பல்தவணை நிதியிடல் வசதிகள் நீண்டகால கடப்பாடு தேவைப்படும் துறைகளில் உள்கட்டுமானத் திட்டங்களுக்கு தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

22. **ஆ.அ.வ. யின் பெறுமதி சேர்ப்பு.** இலங்கையின் உதவித் தேவைகள் அதன் வருமான மட்டங்கள் உயருகின்ற போது மாறும். புகையிரத சேவைகள், திறன் மற்றும் பசுமை நகரங்கள், காற்று மற்றும் சூரிய சக்தி, மற்றும் உயர் கல்வி, போன்ற புதிய வளர்ச்சி சார்ந்த பகுதிகளில், சாத்தியமானளவு தனியார்த் துறையின் பங்கேற்புடன், ஆ.அ.வ. செயற்பாடுகளை தேர்ந்தெடுக்கப்பட்டதன் அடிப்படையில் விரிவாக்கும். பொருத்தமான அறிவுசார் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குதல், சிறந்த நடைமுறைகளை வெளிப்படுத்துதல், புதுமைகளுக்கான அத்திவாரத்தை இடல், மற்றும் சமகால தொழில்நுட்பங்களுக்கான உட்கவரும் திறனை அதிகரித்தல்

[19] அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அணி (Matrix) (இணைப்பு 3 இல் இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியலிலிருந்து அணுகக்கூடியதாக உள்ளது)

[20] நா.கூ.மூ. இன் கீழான மூலோபாய குறிக்கோள்கள் ஆ.அ.வ. இனதுடன் இணைந்துள்ளன. 2015. வாடிக்யாளர்கள்- பங்களிப்பாளர்கள்-கூட்டுப்பணியாளர்கள்: மேல் நடுத்தர-வருமான நாடுகளுடன் ஒரு புதிய கூட்டாண்மை. மணிலா (பெப்பிரவரி).

என்பனவற்றின் ஊடாகவும் கூட ஆ.அ.வ. பெறுமதி சேர்க்கும். கொள்கை சீர்திருத்தங்கள் தொடர்பான கவனம், மற்றும் தற்போதுள்ள நிறுவனங்களின் திறனை வலுப்படுதுதல் என்பன ஆ.அ.வ. யின் தலையீடுகளின் நிலைபேற்றிற்கு பங்களிப்புச் செய்யும். இது ஆ.அ.வ. யினை அரசாங்கம், அபிவிருத்திப் பங்காளர்கள், மற்றும் சிந்தனையாளர்கள் ஆகியோருடன் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் நாட்டிற்குக்-குறிப்பான மேலெழும் கட்டுப்பாடுகளுக்கு அறிவுசார் தீர்வுகளை உருவாக்குவதன் பொருட்டு ஈடுபாடு கொள்ளச் செய்யும். பொது மற்றும் தனியார்த் துறைகளுக்கு இடையிலான தலையீடுகளின் கூட்டுவிளைவு ஆ.அ.வ. யின் தனியார்த் துறை செயற்பாடுகளுக்கு மிகை நிரப்பும் பொதுத் துறை தலையீடுகளை விரிவாக்குவதன் மூலம் ஊக்குவிக்கப்படும்.

**நாட்டிற்கான கூட்டாண்மை மூலோபாயத்திற்காக கவனத்தில் கொள்ளப்படும் பரப்புக்கள், 2017-2022**

**மேல்-நடுத்தர வருமான நாடு என்ற தகுதிநிலைக்கு மாறுதல்**

**தூண் 1:** பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடு என்பனவற்றின் பன்முகப்படுத்தலை ஊக்குவிப்பதன் மூலம் வளர்ச்சியின் இயக்கிகளை வலுப்படுத்துதல

**தூண் 2:** உள்ளடக்குந்தன்மையை ஊக்குவிப்பதன் மூலம் வளர்ச்சியின் தரத்தினை மேம்படுத்துதல்

- வளர்ச்சி-சார்ந்த உள்கட்டுமானம் மற்றும் உபகரணங்களின் வழங்கலை விரிவாக்குதல்
- பொருளாதார இடைவழி ஏற்படுத்தல்
- மனித மூலதனத்தை தரமுயர்த்துதல்

- விவசாய உள்கட்டுமானத்தை வலுவூட்டி வர்த்தகமயப்படுத்தல்
- கிராமப்புற இணைப்பினை மேம்படுத்துதல்
- பொது சேவைகள் விநியோகத்தினை மேம்படுத்துதல்
- சி.ந.நி. களிற்கு நிதிக்கான அணுகலை விரிவாக்குதல்

**கருப்பொருள்சார் குறிக்கோள்கள்**

- தனியார்த்துறை வளர்ச்சி மற்றும் பொது-தனியார் கூட்டாண்மையை மேம்படுத்துதல்
- சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், மற்றும் அனர்த்த இடர் முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல்
- பால் சமத்துவத்தை ஊக்குவித்தல்

சி.ந.நி. – சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள்
மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கி

## 1. தூண் 1: பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடு என்பனவற்றின் பன்முகப்படுத்தலை ஊக்குவிப்பதன் மூலம் வளர்ச்சியின் இயக்கிகளை வலுப்படுத்துதல்

23. **வளர்ச்சி-சார்ந்த உள்கட்டுமானம் மற்றும் உபகரணங்களின் வழங்கலை விரிவாக்குதல்.** பிரதான துறைகளில் மூலோபாய முதலீடுகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் ஆ.அ.வ. உட்கட்டுமானத்தை விரிவாக்கி மேம்படுத்தும்.

- போக்குவத்துத் துறையில், ஆ.அ.வ. சாலைகள், துறைமுகங்கள் மற்றும் புகையிரதத் துறைக்கு ஆதரவளிப்பதன் மூலம் இணைப்பினை மேம்படுத்தும். வேறு போக்குவரத்து முறைகளை மேம்படுத்துவதன் மூலம் சாலைக் கட்டமைப்பின் மீதான சுமை குறைக்கப்படும். சர்வதேச துறைமுக வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சாலைகள் மற்றும் புகையிரதத் துறை ஊடாக சிறந்த இணைப்புக்களை வழங்குவதன் மூலம் பிராந்திய ஒத்துறைப்பிற்கு ஒரு ஊக்கம் கிடைக்கும்.
- நகர்புறத் துறையில், ஆ.அ.வ. கொழும்புப் பெரும்பாகம் மற்றும் யாழ்ப்பாண நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் தொகுதிகள், மற்றும் கொழும்பு-திருகோணமலை பொருளாதார பாதை (கொ.தி.பொ.பா.) மற்றும் மேற்குப் பெருநகரங்கள் உட்பட, வளர்ச்சி உள்ளாற்றலுள்ள இரண்டாம்நிலை நகரங்களிற்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும். உயர்-தர முதலீடுகளை ஈர்ப்பதற்கும் நகர்ப்புற ஆளுகையை மேம்படுத்துவதற்கும் நகரத் திரட்சியை ஊக்குவிப்பதன் மூலம் இந்த மூலோபாயம் வளர்ச்சிக்கு உதவும். நீர் உவர்ப்பு நீக்கம், திண்மக் கழிவு முகாமைத்துவம், திறன் நகர உட்கட்டுமானம், மற்றும் நில மேம்பாடுகள் ஆகியவை ஆராயப்படும்.
- சக்தித் துறையில், தலையீடுகள் காற்று மற்றும் சூரியசக்தி என்பனவற்றைப் பயன்படுத்தி பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி விரிவாக்கம் மற்றும் புதுமையானதும் உயர்தரமானதுமான தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் என்பன தொடர்பில் கவனம் செலுத்தும். மின்சார விநியோகத்தின் நம்பகத்தன்மை மேம்படுத்தப்படும். எரிவாயுவினை அடிப்படையாகக் கொண்ட மின்சாரப் பொறியினைப் பயன்படுத்துவதன் உள்ளாற்றல் பற்றி ஆராயப்படும், அத்துடன் ஒரு சாத்தியமான இலங்கை-இந்திய மின்சார இடைத்தொடர்பிற்கு வசதியளிப்பதன் மூலம் பிராந்திய ஒத்துழைப்பு முன்னெடுப்புக்கள் ஊக்குவிக்கப்படும்.

24. நிறுவன நீதியான திறன் வலுவூட்டலுக்கு, குறிப்பாக உள்கட்டுமானம் மற்றும் பயன்பாடுகளில் சம்மந்தப்பட்டுள்ள அரச உடமை நிறுவனங்கள் பற்றி, அழுத்தம் கொடுக்கப்படும்.

- ஒரு அதிவேகப் பாதை கூட்டுத்தாபனம் ஒன்றினைத் ஸ்தாபிப்பது வியாபாரத் திட்டமிடல், நிதி முகாமைத்துவம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு (செ&ப), மற்றும் கட்டணக் கொள்கை மற்றும் சேகரிப்பு முறைமைகளை வலுப்படுத்துவதற்கு உதவும்.
- திட்டமிடல், திட்ட அபிவிருத்தி, கொள்வனவு, திட்ட முகாமைத்துவம், மற்றும் பாதுகாப்பு அமுலாக்கத்திற்காக இலங்கை புகையிரத சேவையின் திறன் மேம்படுத்தப்படும்.
- திட்டமிடல், நிறுவன செயல்திறன் மற்றும் பொ.த.கூ. ஆகியனவற்றில் இலங்கைத் துறைமுக அதிகாரசபை வலுவூட்டப்படும்.
- நிதி முகாமைத்துவம் மற்றும் பொ.த.கூ. முறையினைப் பயன்படுத்தி தனியார்த் துறையினை சம்பந்தப்படுத்துதல் என்பனவற்றில் இலங்கை மின்சார சபையின் நிறுவனத்திறன் மேம்படுத்தப்படும். எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான செலவீன அடிப்படையிலான விலையிடற் பொறிமுறையை நிறுவனமயப்படுத்துதல், மற்றும் இலங்கை மின்சார சபையின் செயல்பாட்டு வியாபார அலகுகளின் நிதியியல் வேறாக்கம் என்பனவற்றிற்கு உதவியளிக்கப்படும்.
- அதிகரிக்கப்பட்ட சொத்து வரி சேகரிப்பு, மேம்படுத்தப்பட்ட நகரத் திட்டமிடல், மற்றும் வலுவூட்டப்பட்ட செயல்பாடு மற்றும் பராமரிப்பின் பயன்பாடு போன்ற சீர்திருத்தங்களுடன் இணைக்கப்பட்ட செயலாற்றல்-அடிப்படையிலான நிதியிடலை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஊடாக உள்ளூராட்சி அரசாங்கங்கள் மற்றும் தொடர்பான நிறுவனங்களின் திறன் தரமுயர்த்தப்படும். ஆதரவு சில மாநகராட்சிகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் பொ.த.கூ. முன்னெடுப்புகளுக்கு ஊக்கமளிப்பதனையும் உள்ளடங்கும். ஆ.அ.வ. ஒரு சுயாதீன ஒழுங்கமைப்பு மற்றும் சுங்கவரி அமைப்புப் பொறிமுறை என்பனவற்றினை ஏற்படுத்துதல் உள்ளிட்ட, சீர்திருத்தங்களைத் தொடரும்.

25. **பொருளாதார பாதையை ஏற்படுத்தல்.** மேல் மாகாணத்திற்கு அப்பால் தனியார்த் துறை அபிவிருத்திற்கு வசதியளிப்பதற்கு, ஆ.அ.வ. கொ.தி.பொ.பா. க்காக ஒரு விரிவான திட்டத்தினை உருவாக்குவதற்கு ஒரு ஆய்வினை மேற்கொண்டு வருகின்றது. ஒரு பல்துறை அணுகுமுறை தொழில்துறை, உள்கட்டுமானம், ஏற்பாட்டியல் மற்றும் நகரமயமாக்கலை ஒருங்கிணைத்து கூட்டுவிளைவை ஏற்படுத்துவதன் மூலம் ஒரு பொருளாதார பாதையை உருவாக்குவதில் ஒரு பல்துறை அணுகுமுறை பின்பற்றப்படும். இது பொதுவாக ஒரு பிரதான போக்குவரத்து கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட, கட்டமைப்பதற்கான உயர்-தரமான உள்கட்டமைப்பை ஏற்படுத்தும். இந்தப் பொருளாதாரப் பாதையானது துடிப்பான தொழிற்றுறை வலயங்கள், நிறுவனம்சார் இடங்கள், மற்றும் தொழிலாளர்களுக்கான வதிவிட மனைகள் என்பனவற்றுடன் நகரங்களின் தொகுதிகளை இணைக்கும்; வியாபாரங்களை அமைப்பதற்கு சாதகமான மற்றும் போட்டிகரமான சூழலை வழங்கும்; மற்றும் சரக்குகள் மற்றும் மக்களின் வினைத்திறனான அசைவினை வசதியாக்கும்.[21]

---

[21] பொருளாதாரப் பாதை அரசாங்கத்தினால் திட்டமிடப்படுகின்ற அதேவேளை, தனியார்த்துறை ஒரு முக்கிய வகிபாகத்தை வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. காலப்போக்கில், பொருளாதாரப் பாதை, உலகளாவிய மதிப்புச் சங்கிலியில் பங்கேற்கும் நிறுவனங்களின் ஊடாக பொருளதார பன்முகப்படுத்தல் மற்றும் தொழில் உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்யும்.

26. பொருளாதார பாதையின் வெற்றிகரமான அபிவிருத்தி ஒரு பெரிய நிகழ்ச்சிநிரலாகும் அத்துடன் அரசாங்கம், ஏனைய அபிவிருத்திப் பங்காளர்கள், மற்றும் தனியார்த்துறையின் தீவிர பங்கேற்பு தேவைப்படும். தரப்பட்ட ஆ.அ.வ. யின் ஒப்பீட்டளவிலான அனுகூலம், பொருளாதார பாதையில் உள்கட்டுமானத்தை வலுப்படுத்துவதில், குறிப்பாக போக்குவரத்தில் (சாலைகள், புகையிரதம், மற்றும் துறைமுகங்கள்) அது ஒரு பாகத்தை வகிக்க முடியும்; சக்தி; மற்றும் நகரத் துறைகள், ஏற்பாட்டியல் மையங்கள், உலர் துறைமுகங்கள், பண்டகசாலைகள், கழிவு முகாமைத்துவம், மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறிகள் போன்ற ஆதரவு உள்கட்டமைப்பை உருவாக்குவதிலும் இது உள்ளாற்றலுள்ள ஒரு பாகத்தை வகிக்க முடியும். ஆ.அ.வ. கல்வி மற்றும் திறன்கள் இடைவெளிகளை மதிப்பிடுதல் மற்றும் அதன் மனித வள மேம்பாட்டு செயல்பாடுகளை பாதையின் தேவைகளுக்கு சார்பாக மாற்றுவதற்கு உதவும். நா.கூ.மு. செயல்படுத்தற் காலத்தின்போது உதவியின் தன்மை பற்றி மேலும் குறிப்பாகத் தீர்மானிக்கப்படும்.

27. **மனித மூலதனத்தினைத் தரமுயர்த்துதல்.** ஆ.அ.வ. யின் ஆதரவு இரண்டாம் நிலை கல்வி, தொதொகப, மற்றும் உயர் கல்வி சம்பந்தப்பட்ட ஒரு ஒருங்கிணைந்த மனித மூலதன அபிவிருத்தி திட்டத்தினை மையப்படுத்தி கவனம் செலுத்தும். ஆ.அ.வ. அதன் கல்வித் துறைத் தலையீடுகள் மற்றும் உருவாகும் தொழில்கள் ஆகியவற்றிற்கு இடையிலான இணைப்புக்கள் தொடர்பில் பெரிதும் கவனம் செலுத்தும். தெரிவுசெய்யப்பட்ட தொழில்துறைகளுக்கு, குறிப்பாக அரசாங்கத்தினாலும் பொருளாதார பாதை ஆய்வில் அடையாளம் காணப்பட்டவை தொடர்பில் புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். உயர் கல்வித் துறையிலான தலையீடு பொ.த.கூ. முறையினைப் பயன்படுத்தி ஒரு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினைத் தாபிப்பதற்கு ஆதரவளித்தல் மற்றும் சந்தை சார்ந்த பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதில் உதவுதல் ஆகவிருக்கும். தொழில்நுட்பக் கல்விக்கான ஆதரவு தெரிவுசெய்யப்பட்ட அரச பல்கலைக்கழகங்களுக்கும், அதே மாதிரி பிரதிசெய்யப்படுமாறு நீடிக்கப்படும். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் மனித வள தளத்தின் விரிவாக்கத்தினைத் தொடங்குவதன் மூலம், ஆ.அ.வ. யின் தலையீடு பொருளாதாரத்தில் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புக்களின் பாரிய உட்செலுத்துதலை நோக்கி முதல் படிகளை வழங்கும். அடுத்த படியாக, தொழிற்றுறை மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இடையே இணைப்புக்களை வலுப்படுத்துவது மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செலவினங்களின் அளவினை அதிகரிப்பதற்கு அரசாங்கம் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களுடன் ஆ.அ.வ. உரையாடலைத் தொடக்கித் தொடரும்.

2. **தூண் 2:** உள்ளடக்குந்தன்மையை ஊக்குவிப்பதன் மூலம் வளர்ச்சியின் தரத்தினை மேம்படுத்துதல்

**28. விவசாய உள்கட்டுமானத்தை வலுவூட்டி வர்த்தகமயப்படுத்துதல்**. ஆ.அ.வ. யின் கவனம் பின்வருவனவற்றில் இருந்தது (i) நீர்த்தேக்கத்தின் கொள்திறனை அதிகரித்தல், நீர் கொண்டுசெல்லும் திறனை மேம்படுத்துதல், மற்றும் காலநிலை மற்றத்தைப் பின்பற்றும் முதலீடு மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நீரை அதிகபட்சம் தேக்கிவைத்தல்; (ii) நீர் பயன்பாட்டின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்; மற்றும் (iii) தேசிய நீர் முகாமைத்துவத்தின் ஆளுகையை மேம்படுத்துதல். (i) நீர்ப்பாசன முறை சீரழிவதனைத் தடுப்பதற்கு செயல்படுத்தல் மற்றும் பராமரிப்பினை வலுவூட்டுவதன் மூலம் நீர்ப் பயன்பாட்டின் வினைத்திறனை மேம்படுத்துதல், (ii) நீர்ப்பாசனத் தகவல் முறைமைகளைப் புதுப்பித்தல், மற்றும் (iii) பயிர்ச் செறிவாக்கம், பயிர் பல்வகமை, மற்றும் விவசாயத்தின் வர்தகமயமாக்கல் ஊடாக நீர்ப்பாசன முதலீடு தொடர்பான விளைவுகளை அதிகரித்தல் ஆகியனவற்றிற்கு ஆ.அ.வ. தொடர்ந்தும் ஆதவளிக்கும். தேசிய நீர் வளங்களின் ஆளுகையை மேம்படுத்துவதற்காக நிறுவனம்சார் வலுவூட்டல் மற்றும் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் நிறுவனங்கள் இடையே சிறந்த ஒருங்கிணைப்பு பற்றிய அரசாங்கத்தின் முனைப்புக்களுக்கும் ஆ.அ.வ. ஆதரவளிக்கும். மீன்பிடி உப- துறையில், பிற பிரதேசங்களுக்கு பிரதியிடப்படக்கூடிய சாத்தியத்துடன், மோதல்களினால்-பாதிக்கப்பட்ட வட மாகாணத்தின் கரையோர மாவட்டங்களில் உள்கட்டமைப்பினை மேம்படுத்துவதன் மூலம் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதே குறிக்கோளாக உள்ளது.

**29.** பாரிய விவசாய வலயங்களை ஏற்படுத்துவது மற்றும் அவற்றிற்கு கிராமப்புற சாலைகள், களஞ்சிய வசதிகள் (குளிர் களஞ்சியம் உட்பட), சேகரிப்பு நிலையங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் இடங்களை வழங்குவதன் மூலம் விவசாயத்தினை நவீனமயப்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்தினை மிகைநிரப்புவனவற்றிற்கு ஆதரவளிப்பது பற்றி ஆ.அ.வ. ஆராயும். இது உயர்-பெறுமதியான பயிர்களுக்கு உற்பத்தியினை பன்முகப்படுத்தி தொழிலாளர்களின் உற்பத்தித்திறனையும் அவர்களுடைய வருமானத்தையும் அதிகரிக்கும். விவசாயம் மற்றும் உணவு மதிப்புச் சங்கிலியின் (பண்ணை உள்ளீடுகள், வேளாண்மை, பதனிடல், களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் ஏற்றுமதி) முழு வியாபார வாய்ப்புக்களை ஆராய்வதன் மூலம் ஆ.அ.வ. யின் தனியார்த்துறை செயல்பாடுகள் விவசாய வணிகத்திற்கு ஆதரவளிக்கும்.

30. **கிராமப்புற இணைப்புக்களை மேம்படுத்தல்.** பின்தங்கிய பிராந்தியங்களின் கிராமிய பொருளாதார வளர்ச்சி நிலையங்கள் கிராமப்புற அணுகலை தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேகப் பாதைக் கட்டமைப்புடன் ஒருங்கிணைத்து, பிரதான ஏற்பாட்டியல் கட்டமைப்பிற்கு இணைக்கப்படும். இது கிராமப்புற சமூகங்கள் மற்றும் நாட்டில் உள்ள சமூகப் பொருளாதார மையங்களுக்கு இடையேயான இணைப்புக்களை மேம்படுத்த உதவும், அது கிராமப்புறப் பிரதேசங்களில் உற்பத்தித்திறனை அதிகரிக்கும்.

31. **பொது சேவைகள் விநியோகத்தினை மேம்படுத்துதல்.** வறிய மற்றும் குறைவாக சேவையாற்றப்படும் பகுதிகளுக்கு அடிப்படை சேவைகளுக்கான அணுகல் வழங்கப்படும். நீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகளின் வழங்கல் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதனை இலக்காகக் கொண்டிருக்கும். நீண்டகால சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்கல் ஏற்பாட்டிற்கும் அழுத்தம் கொடுக்கப்படும். புதிதாகத் தோன்றும் தொழில்களை தொ.தொ.க.ப. நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைப்பதற்கு பெரும் அவதானம் செலுத்தப்படும். பொருளாதார பாதையின் அபிவிருத்திற்கு ஆதரவளிப்பதில், தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகளுக்கு இடையிலான இணைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் கிராமப்புற துறையின் வளர்ச்சிக்கு உதவும் விவசாய வணிக தொழிற்றுறைகளை ஊக்குவிப்பதற்கான நடைமுறைகள் பற்றி ஆராயப்படும். தோட்டத் துறையில் வசிக்கும் குறைந்த சேவைபெறும் நலிந்த மக்களுக்கு, தனியார்த்துறை நிதியிடலில் சம்பந்தப்பட்ட தோட்டக் கம்பனிகளின் கூட்டாண்மையில், அடிப்படை சுகாதார பராமரிப்பு சேவைகளின் தரத்தினையும் ஆ.அ.வ. விரிவாக்கும். சிறந்த தொழில்நுட்பங்களின் ஊடாக தொற்று நோய்களை கண்டுபிடித்துக் கட்டுப்படுத்துவதற்கு தற்போதைய சுகாதார பராமரிப்பு முறைமை பலப்படுத்தப்படும். பொது சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிலைபேறான நிதியிடல் மாதிரிகளை உருவாக்குவதற்கு ஆராய்ச்சி மற்றும் கொள்கை வடிவமைப்பிற்கும் ஆதரவு விரிவாக்கப்படும்.

32. **சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதிக்கான அணுகலை விவாக்குதல்**. சி.ந.நி. களுக்கு நிதிசார் இடை இணக்குவிப்பை வலுப்படுத்துவதற்கு ஒரு விரிவான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஆ.அ.வ. எடுத்து வருகின்றது. குறைந்த சேவையாற்றப்படும் பிரிவுகளின் சி.ந.நி. களுக்கு கடன் அணுகல் வசதியளிப்பதற்கு, பெண் தொழில்முனைவோர், முன்பு வங்கிகளிடமிருந்து கடன்பெறாத சி.ந.நி. கள், கொழும்பிற்கு வெளியிலுள்ள சி.ந.நி. கள் போன்ற சி.ந.நி. களுக்கான கடன் வழங்கும் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப உதவி (தொ.உ.) ஊடாக, ஆ.அ.வ. த.தொ.தொ.- வியாபார செயல்முறை வெளி ஒப்படைப்புத் தொகுதிகள் மற்றும் ஏற்றுமதி சார்ந்த உணவு என்பனவற்றில் வியாபார அபிவிருத்தி உதவியினை நேரடியாகவும் வழங்கி வருக்கின்றது. தற்பொழுது, ஆ.அ.வ. (i) சாத்தியமான வியாபாரத் திட்டங்களைக் கொண்டுள்ளதும் ஆனால் போதுமான ஈட்டினைக் கொண்டிராததுமான சி.ந.நி. களுக்கான நிதியிடல் அணுகலை மேம்படுத்துவதற்கு சி.ந.நி. கடன் உத்தரவாத நிறுவனங்களை அமைத்தல், மற்றும் (ii) சி.ந.நி. களின் மூலதனத்திற்கான அணுகல் அல்லது இடர் மூலதனத்தை மேம்படுத்தும் ஒரு சி.ந.நி. துணிகர மூலதன நிதியத்தை ஏற்படுத்துதல் என்பன தொடர்பில் அரசாங்கத்துடன் பணியாற்றி வருகின்றது.

## 3. கருப்பொருள்சார் முன்னுரிமைகள்

33. **தனியார்த்துறை அபிவிருத்தி மற்றும் பொது- தனியார் கூட்டாண்மையை மேம்படுத்துதல்.** தனியார்த் துறை அபிவிருத்திக்கு ஒரு இயல்பான சூழலை உருவாக்குவதில் ஆ.அ.வ. யின் ஆதரவு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது (i) நீதி முறைமை, குறிப்பாக வணிகச் சட்டத்தில் தனியாத்துறையின் கோரிக்கைகளுக்கு சிறப்பாக பதிலிறுக்கக் கூடியவாறு, வலுவூட்டுவதற்கான ஆதரவு; (ii) சட்ட மற்றும் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை வலுவூட்டல், பத்திரச் சந்தை அபிவிருத்தி, பெறுதிகளுக்கு உகந்த சூழலை உருவாக்குதல், மற்றும் காப்புறுதி மற்றும் ஓய்வூதிய தொழில்துறைகளை உருவாக்குதல் என்பனவற்றை உள்ளடக்குகின்ற, மூலதனச் சந்தை மேம்பாடு; (iii) இலங்கைக்கான ஒரு புதுமையான அணுகுமுறையாக சி.ந.நி. களுக்கு ஒரு கடன் உத்தரவாத நிறுவனத்தினைத் தாபித்தல்; மற்றும் (iv) பாரிய உள்கட்டுமானம், உயர் கல்வி, மற்றும் தொதொகப திட்டங்களில் பொ.த.கூ. களுக்கு வசதியளித்தல். வணிக வசதியளித்தலுக்கான ஆதரவு தெற்காசிய துணைப் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆராயப்படும். ஆ.அ.வ. யின் தனியார்த் துறை செயல்பாடுகள் இலக்கு வைக்கப்பட்ட பிரதேசங்களில் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு கடன்கள், மூலதன முதலீடுகள், அல்லது பொது மற்றும் தனியார்த்துறை வங்கிகள், வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கான உத்தரவாதங்கள் என்பனவற்றை தொடர்ந்து வழங்கும். ஆ.அ.வ. தனியார்த் துறை செயல்பாடுகள் திணைக்களம் (PSOD) இலங்கையில் ஆ.அ.வ. யின் செயல்பாடுகளின் பங்கினை அதிகரிப்பதற்கு உள்கட்டுமானம், தொழிற்றுறை, மற்றும் விவசாய வர்த்தகத்தில் ஈடுபாட்டினை அதிகரிக்கும். பொ.த.கூ. கொடுக்கல்வாங்கல் ஆலோசனைச் சேவைகளில் உள்ள வாய்ப்புக்கள் பற்றியும் கூட ஆராயப்படும்.

34. **சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், மற்றும் அனர்த்த இடர் முகாமைத்துவத்தினை வலுப்படுத்துதல்.** ஆ.அ.வ. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், மற்றும் அனர்த்த இடர் முகாமைத்துவம் ஆகியவற்றினை வலுப்படுத்தும். சுத்தமான சக்தி (காற்று மற்றும் சூரியசக்தி), இயற்கை வள முகாமைத்துவம், கழிவுநீர் கட்டமைப்பின் விரிவாக்கம், கசிவுநீர் குறைப்பின் ஊடான நீர்ப் பாதுகாப்பு, மற்றும் புகையிரதக் கட்டமைப்பு

மேம்பாட்டின் ஊடான நிலைபேறான போக்குவரத்து ஆகியவற்றில் ஆ.அ.வ. அதன் உதவிகளை விரிவாக்கும். சுற்றுச்சூழல், காலநிலை, மற்றும் அனர்த்த மீட்டெழிற்சி பற்றிய பரிசீலனைகள் ஆ.அ.வ. யின் செயல்பாடுகளில் பிரதான நீரோட்டத்துடன் இணைக்கப்படும். பச்சைவீட்டு வாயு உமிழ்வுக் குறைப்பு, மற்றும் காலநிலை மாற்றத்தைப் பின்பற்றும் தொழில்நுட்பங்கள் மற்றும் ஒரு ஒருங்கிணைந்த அனர்த்த இடர் முகாமைத்துவ பொறிமுறையை செயல்படுத்துதல் என்பனவற்றில் ஆ.அ.வ. அரசாங்கத்தின் முயற்சிகளை ஆதரிக்கும்.

**35.** **பால் சமத்துவத்தை மேம்படுத்துதல்.** அதன் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் ஊடாக, ஆ.அ.வ. திட்ட தயாரிப்பு கட்டத்தில், மற்றும் வடிவமைப்புக் கட்டத்தில் திட்டங்களை வகைப்படுத்துதல் என்பனவற்றில் விபரமான பால் மதிப்பீடுகளை மேற்கொள்வதன் மூலம் பால் சமத்துவக் கரிசனைகளை கவனத்தில் கொள்கின்றது. பால் கரிசனைகளை கணிசமான அளவு பிரதானநீரோட்டத்திற்கு இட்டுச்செல்லும் உள்ளாற்றலுள்ள அல்லது போதுமான பால் தாக்கத்தினைக் கொண்டிருக்கும் சாத்தியமுள்ள திட்டங்களுக்கு பால் செயல் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தத் திட்டங்கள் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டு முன்னேற்றங்கள் காலாண்டு திட்ட மீளாய்வுகளில் அறிவிக்கப்படுகின்றன. ஆ.அ.வ. முன்னுரிமை பகுதிகளில் பால் சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கு அதன் முயற்சிகளைப் பலப்படுத்தும். பால் சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கத்திற்காக திறன் மேம்பாட்டு முனைப்புக்கள் ஆ.அ.வ.- நிதியிடப்பட்ட திட்ட அமுலாக்கத்துடன் இணைக்கப்பட்ட துறைசார் நிறுவனங்களை சம்பந்தப்படுத்துவதன் மூலம் மேம்படுத்தப்படும். ஈடுபாடுகளுக்குச் சாத்தியமான இடங்களை அடையாளப்படுத்துதல், அரசாங்கத்துடன் கூட்டுழைப்பில், பால் சமத்துவம் மற்றும் பெண்களின் அதிகாரமளிப்பிற்கு ஆதரவளிப்பது தொடரப்படும்.

### உ. அறிவு உதவிக்கான முன்னுரிமைகள்

**36.** ஒரு புதிய மே.ந.வ.நா. ஆக, இலங்கை பல்வேறு பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும். ஆ.அ.வ. அதன் நிதியியல் உதவியை தற்போதைய கட்டுப்பாடுகள் மற்றும் ஒரு உயர் மட்ட அபிவிருத்திக்கு முதிர்ச்சியடையும் பொருளாதாரமாக எதிர்கொள்ளக் கூடிய அறிவுசார் உற்பத்திகளுடன் கலக்கின்றது. அறிவுசார் ஆதரவு ஒரு ‘ஒரு ஆ.அ.வ.’ அணுகுமுறையை பின்பற்றும். இந்த நாட்டு அறிவுத் திட்டம் பின்இணைப்பு 2 இல் இருக்கின்றது.

**37.** நா.கூ.மூ., நா.க.ஆ. இனது பூர்வாங்க முடிவுகளைப் பரிசீலித்தது. நா.க.ஆ. இனது இறுதி முடிவுகளை கவனத்திலெடுத்து ஆ.அ.வ. யின் செயல்பாடுகள் மேலும் மீளாயப்பட்டு தேவைக்கு ஏற்றவாறு சரிசெய்யப்படும். பகுப்பாயப்பட்ட சில பிரச்சினைகள் நா.க.ஆ. காலப்பகுதியில் ஆ.அ.வ. யின் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படும் சாத்தியம் உள்ளனவற்றிற்கும் அப்பால் செல்கின்றன. நா.க.ஆ. அபிவிருத்திச் சவால்களை எதிர்கொள்வதற்கு இரண்டு தொகுப்பு நடவடிக்கைகளை ஆராய்ந்தது: (i) இலங்கைக்கு உயர்-வளர்ச்சி விகிதங்களை பேணுவதற்கு உதவுவன, பொருளாதார நடவடிக்கைகளின் பன்முகப்படுத்தலை ஊக்குவித்தல், துறைகள் பூராகவும் உற்பத்தித்திறனை உயர்த்துதல், பொருளாதாரத்திற்குப் பூகோளப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைவதற்கு உதவுதல் மற்றும் ஆக்கபூர்வமான தொழில்களை உருவாக்குதல்; மற்றும் (ii) நன்மைகள் அதிகம் சமமாக பகிரப்படுமாறு வளர்ச்சியின் உள்ளடக்குந்திறனை ஊக்குவிப்பன. இவைகள் அரசாங்கத்தின் அபிவிருத்தி மூலோபாயத்தில் இனங்காணப்பட்ட முக்கிய சாவால்களும் கூட. நா.க.ஆ. இனை மிகைநிரப்புவதற்கு, ஆ.அ.வ. கொள்கைகளை உருவாக்குவதற்கு, தொழில்கொள்ளும் பரப்புக்களை உள்ளடக்குதல், மதிப்புச் சங்கிலி வாய்ப்புக்கள்; மனித மூலதன அபிவிருத்தித் திறன்; முதியோர் பராமரிப்பு; மற்றும் சமூக காப்புறுதி.

**38.** ஆ.அ.வ. ஒரு சாத்தியக்கூற்றுப் பகுப்பாய்வு, ஒரு உட்கட்டமைப்பு மூலோபாயம், அத்துடன் ஒழுங்கமைப்பு, நிறுவனம்சார் கட்டமைப்பு மற்றும் நிதியிடல் திட்டம் உட்பட கொ.தி.பொ.பா அபிவிருத்தித் திட்டம் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொள்கின்றது. இந்த ஆய்வு ஏனைய திட்டமிடப்பட்ட பொருளாதார பாதைகளிற்கான கருத்தியல் கட்டமைப்பினை வழங்கும். துறைமுகங்கள் மற்றும் புகையிரத அபிவிருத்திக்கான பெருந்திட்டங்கள் உட்பட, பரிமாற்ற முறைமையின் உறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பு தரநிலைகளின் வளர்ச்சி, தற்போதைய நீர் கொள்கைகள் மற்றும் சட்டவாக்கங்களின் பலவீனங்கள், மற்றும் பொது சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிலைபேறான நிதியிடல் மாதிரிகள் ஆகிய துறைக்குக் குறிப்பான ஆய்வுகளும் கூட நா.க.ஆ. காலப்பகுதியில் திட்டமிடப்படுகின்றன. அரசாங்கத்தின் தேவைகளைப் பொறுத்து, ஏனைய அறிவுசார் உற்பத்திகள் நா.கூ.மூ. அமுலாக்கல் காலப்பகுதியில் தயாரிக்கப்படும்.

## IV. மூலோபாய செயல்படுத்தல்

### அ. குறிகாட்டி வள பரிமாணங்கள்

**39.** ஆ.அ.வ. அதன் இறையாண்மை செயல்பாடுகளை 2018-2022 ஆம் ஆண்டுகளுக்கு மேலாக மே.நவ.நா. என்ற அந்தஸ்தை அடைவதை நோக்கி உட்கட்டுமானம் மற்றும் சமூகத் தேவைகளை அடைவதில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கு ஆண்டிற்கு \$800 மில்லியன்- \$1,000 மில்லியன் அளவு வரை முன்மொழிகின்றது.

உயர் உள்ளீர்புத் திறனுடன்[22] இலங்கையின் பிரிவு செயலாற்றல் திருப்திகரமாக இருப்பதுடன், மேலும் உள்ளீர்க்கத் தயாராக உள்ளது. பொதுக் கடன் 2016 ஆம் ஆண்டில் மொ.தே.உ. யின் 79% இருந்த அதேவேளை, தொடரும் ச.நா.நி. நிகழ்ச்சித்திட்டம் சீர்திருத்தப் பொதிகள் அமுல்படுத்தப்படுகின்ற போது பொதுக் கடனைக் குறைப்பதற்கான இலக்குகளைக் கொண்டிருக்கின்றது. ஆ.அ.வ. யின் அதிகளவு கடன் வாங்குவது வணிகக் கடன்களைக் குறைத்து கடன் நிலைபேற்றிற்கு பங்களிக்கும். முன்மொழியப்பட்ட உதவி குறிக்கப்பட்ட வள ஒதுக்கீடு 2018-2020 காலப்பகுதியில் வருடத்திற்கு $600 மில்லியன் - $650 மில்லியனை விஞ்சுகின்ற நிலையில், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் சுகாதாரத் துறைக்கான சலுகை வளங்கள், அத்துடன் மேலதிக வழக்கமான சாதாரண மூலதன வளங்கள் (சா.மூ.வ.) ஆகியனவற்றிற்கு ஒதுக்கப்பட்ட கூடுதல் வளங்களை அணுக முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த இடைவெளிகளைச் சந்திப்பதற்கான கூடுதல் வளங்கள் தரப்பட்ட இலங்கையின் உள்ளீர்ப்புதிறனை நியாயப்படுத்தக்கூடியனவாக உள்ளன. அபிவிருத்தி பங்காளர்களிடமிருந்து அதிக இணைநிதியிடல் நிதிசார் மற்றும் அறிவு வளங்கள் இரண்டிற்கும் உதவுவதற்கு கூட தொடரப்படும். ஆ.அ.வ. நிதிசாரா துறைகளினுள் (உள்கட்டுமானம், சுகாதாரம் மற்றும் விவசாயம்) அதன் தனியார்த்துறை செயல்பாடுகளை விரிவாக்குவதன் மூலம் அதிகரிப்பதுடன் பொ.த.கூ. ற்கு வசதியளிப்பதில் அதன் வகிபாகத்தை உயர்த்தும். இலங்கை தற்போது ஒரு குழு B நாடு. இலங்கை 2019 இல் குழு C நாட்டிற்குத் தகுதிபெறும்,[23] மற்றும் அதன்பின்னர் அதிக ஒழுங்கான சாமுவ சலுகை உதவியின் முடிவிற்கான இழப்பீட்டிற்காக ஒதுக்கப்படும்.

**40.** நா.கூ.மூ. காலப்பகுதிக்கு தொ.உ. வளங்கள் ஒரு பெரிய அளவு கடனிற்கு உதவுவதற்கு அதிகரிக்கப்பட வேண்டும். இந்த வளங்கள் திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்தி மற்றும் தயாரிப்பு, செயலாக்க ஆதரவு, திறன் மேம்பாடு, மற்றும் அறிவுசார் உற்பத்திகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். இந்த தொ.உ. ஆதரவு 2018-2022 காலப்பகுதியில் வருடமொன்றிற்கு சுமார் $8 மில்லியன் ஆகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது, அது ஆ.அ.வ. யின் தொழில்நுட்ப உதவி சிறப்பு நிதியம், வறுமைக் குறைப்பிற்கான ஜப்பானிய நிதியம், மற்றும் பிற நம்பிக்கை நிதியங்களில் இருந்தான நிதியிடலை உள்ளடக்கும்.

**41.** அரசாங்கத்தின் கட்டுப்படுத்தப்பட்ட நிதி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, தற்போதைய செலவினப்-பகிர்வு ஏற்பாடு மாற்றமடையாதிருக்க முன்மொழியப்படுகின்றது. நா.கூ.மூ. காலப்பகுதிக்கான நாட்டு செலவினப்-பகிர்வு கடனிற்கான உச்சவரம்பு 90% ஆகவிருக்கும். தனிப்பட்ட திட்டங்களுக்கான செலவுப்- பகிர்வு தனித் தனியான அடிப்படையில் தீர்மானிக்கப்படும், அத்துடன் அது திட்டச் செலவு, திட்ட வடிவமைப்பு, மற்றும் இணைநிதியிடல் கிடைக்கப்பெறல் என்பதனைப் பொறுத்து 99% வரை போகலாம். எந்தக் குறித்த துறை சார்ந்த-உச்சவரம்புகளும் நடப்பில் இல்லை. தொ.உ. க்கான நாட்டு செலவுப்- பகிர்வு உச்சவரம்பு மற்றும் பிற மானியங்களுக்கான மொத்தச் செலவின் 85% இல் தொடர்ந்து இருக்கும். இந்த செலவுப்- பகிர்வு எல்லைகள் நா.கூ.மூ. காலப்பகுதியில் நிதி நிலைமைகள் மற்றும் அரசாங்கத்தின் நிதி இயலுமையைப் பொறுத்து சரிநிகர் நிதிகளுக்கு போதிய வளங்களை வழங்குவதற்கு மறுபரிசீலனை செய்யப்படலாம்.

### ஆ. செயல்படுத்தல் முன்னுரிமைகள்

42. **அதிக நிகழ்ச்சித்திட்டமிடல் ஊடாக ஒரு வலுவான திட்ட தொடர்பு ஒன்றினை உருவாக்குதல்.** திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தொடர்பினை வலுப்படுத்துவதற்கு ஆ.அ.வ. அதிக- நிகழ்ச்சித்திட்டமிடும். மேலதிக வளங்கள் கிடைகின்றபோது திட்டங்கள் முறைவழிப்படுத்தப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும். முன் வருவதற்கு முன்னுரிமை என்ற அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலம் திட்டங்களின் தயார்நிலையை அது உறுதிப்படுத்துவதனால் அதிக திட்டமிடல் ஒரு வலுவான தொடர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும். இது அரசாங்கத்தின் தேவைகளுக்கு நெகிழ்வான முறையில் பதிலிறுப்பதற்கு ஆ.அ.வ. க்கு இது ஒரு சந்தர்ப்பத்தையும் வழங்கும்.

43. **நிர்வகிக்கத்தக்க கடன்கள் மற்றும் ஒப்பந்தங்களின் எண்ணிக்கையை ஏற்படுத்துதல்.** மொத்தக் கடன்கள் மற்றும் ஒப்பந்தங்களின் எண்ணிக்கை அத்துடன் மேலதிக பணியாளர் வளங்களுக்கான கோரிக்கையைக் கொண்டிருப்பதற்கு, ஆ.அ.வ. கடன்கள் மற்றும் ஒப்பந்தங்களின் அளவினை அதிகரிக்க முயற்சிக்கும். பாரிய ஒப்பந்தங்கள் பெரிய மற்றும் வலுவான ஒப்பந்ததாரர்களை பங்குபற்ற ஈர்த்தல், செயல்படுத்தற் காலப்பகுதியில் பிரச்சினைகளைக் குறைக்கும்.

44. **துறைசார்ந்த கொள்கை மற்றும் வலுவான அமுலாக்க ஒழுங்குகளில் கவனம் செலுத்தும் திட்டங்களை வடிவமைத்தல்.** ஆ.அ.வ. அதன் திட்ட வடிவமைப்புகளை, தெளிவான மற்றும் துறையை சார் கவனத்தை ஈர்க்கும்

[22] 15 ஜூன் 2017 அன்றிருந்தவாறு, $2.91 பில்லியன் பயனுள்ள கடன்களுள் (32 திட்டங்கள்), 74% வழங்கப்பட்டன மற்றும் 52% வழங்கப்பட்டு வருகின்றன.

[23] இது ஜூலை 2017 இல் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து தகுதிபெற்றதன் பின்னர் சரிசெய்வதற்கு 1.5 வருடங்களுக்கு அரசாங்கத்திற்கு வழங்கப்படும்.

உள்ளடக்கம் மற்றும் தொடரும் கொள்கை உரையாடல் தொடர்பான நிறுவனம் சார் பார்வைகளை அடிப்படையாகக் கொண்டு வலுப்படுத்தும். யதார்த்தமான நடைமுறைப்படுத்தல் ஒழுங்குகள் முன்மொழியப்பட்டு திறன் மேம்பாட்டினால் ஆதரிக்கப்படும்.

45. **கண்டிப்பான திட்ட ஆயத்தநிலை வடிகட்டிகள்.** ஆ.அ.வ. திட்ட அலுவலகம் மற்றும் அதன் பணியாளர்கள் முன்கூட்டியே தாபிக்கப்படல், நிலம் கையகப்படுத்தல் மற்றும் மீள்குடியேற்ற முறைகள், மற்றும் முன்கூட்டிய கொள்வனவு நடவடிக்கைகள் உள்ளடங்கலான, கண்டிப்பான திட்ட ஆயத்தநிலை அளவுகோல்களை பின்பற்றும். இது பொறுப்பேற்கப்படாத நிதிகள் குவிவதனைத் தவிர்ப்பதுடன் நல்ல பிரிவுச் செயலாற்றலை பராமரிக்க உதவும். ஆ.அ.வ. தொ.உ. கடன்கள் மற்றும் திட்ட வடிவமைப்பு முற்பணங்களின் பயன்பாட்டினை பெருவோட்டத்தில் இணைக்கும்.

46. **திட்டம் நிறைவேற்றுதலை வலுப்படுத்துதல்.** அனைத்துத் துறைகளின் செயல்பாடுகளில் நிறைவேற்று நிறுவனங்களின் திறன்களை மேம்படுத்துவதில் ஆ.அ.வ. தொடர்ந்தும் ஈடுபடும். கொள்வனவு, பாதுகாப்புகள், ஒப்பந்த முகாமைத்துவம், மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் பயிற்சி மற்றும் உடனடி உதவி வழங்கப்படும். இந்த முயற்சிகள் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களுடன் மிகவும் தீவிர கூட்டுழைப்பின் ஊடாக வலுப்படுத்தப்படும்.

47. **நாட்டு முறைமையின் பயன்பாடும் ஆளுகை அபாயங்களை நிர்வகித்தலும்.** ஆ.அ.வ. (i) நாட்டின் பொது நிதி முகாமைத்துவ முறைமைகளை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம், குறிப்பாக நாட்டின் பாதீடு, திறைசேரி, கணக்கியல், மற்றும் கணக்காய்வு முறைமைகள், நிதிகள் கிடைக்கக்கூடியதாக உள்ளதா என்பதனை எதிர்வுகூறுவதனை உறுதிப்படுத்துதல்; (ii) பாதுகாப்புகள் மற்றும் கொள்வனவுகளில், நிறுவனத் திறன் மற்றும் தொடர்புடைய பொறுப்பாண்மை ஆபத்துக்களைக் கருத்தில் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டின் முறைமைகளின் பயன்பாட்டினைப் பின்பற்றுதல்; மற்றும் (ii) ஆ.அ.வ. யின் ஊழல்எதிர்ப்பு கொள்கை (1998, அன்றுவரை திருத்தப்பட்டவாறு) மற்றும் செயல்பாடுகள் மீது அதன் தாக்கம் பற்றி ஆ.அ.வ. யின் ஊழல்எதிர்ப்பு மற்றும் நேர்மைத்திறன் அலுவலகம் மற்றும் இலங்கையின் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு உடன் கூட்டுழைப்பு மற்றும் ஈடுபாட்டுடன் விழிப்புணர்வினை உயர்த்துதல்.

48. **இறையாண்மை மற்றும் இறையாண்மை அல்லாத செயல்பாடுகள் இடையேயான இணைப்புகளை உயர்த்துதல்.** ஆ.அ.வ. தொடர்ந்தும் மூலதனச் சந்தை அபிவிருத்தி, மற்றும் தொ.த.கூ. யை ஊக்குவித்தல் மற்றும் சி.ந.நி. களின் அபிவிருத்தி உள்ளடங்கலாக, ஒரு மேம்படுத்தப்பட்ட வணிக- இயலுமை சூழலை ஆதரிக்கின்றது. பொ.த.கூ. திட்டங்களை உருவாக்கித் தயாரிப்பதற்கான பொதுத் துறைத் திறன் வலுப்படுத்தப்படும். இறையாண்மையற்ற உள்நாட்டுக் கடன்களுக்கு ஒரு முக்கிய கட்டுப்பாடாகவிருந்த, உள்ளூர் நாணயக் கடன் வழங்கலுக்கான வாய்ப்புக்கள் தொடரப்படும்.

## இ. விளைவுகளைக் கண்காணித்தல்

49. நா.கூ.மூ. விளைவுகள் கட்டமைப்பு மே.ந.வ.நா. என்ற அந்தஸ்தை அடைவதற்கு முன்னுரிமைப் பரப்புகளில் விளைவுகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. இது அரசாங்கத்தின் இலக்குகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளதுடன், அரசாங்கம், அபிவிருத்திப் பங்காளர்கள், மற்றும் ஏனைய முக்கிய பங்குதாரர்களின் கூட்டு முயற்சியின் விளைவுகளை உள்ளடக்குகின்றது. இணைப்பு 1 இல் உள்ள விளைவு குறிகாட்டிகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு ஆ.அ.வ. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைத் தொடர்ந்தும் ஆதரிக்கும்.

50. மூன்று குறுக்கு-வெட்டு பரப்புக்கள் தொடர்பான முன்னேற்றம் உள்ளடங்கலாக, நாட்டு திட்டமிடற் பணிகள் காலப்பகுதியில் ஆ.அ.வ. வருடாந்தம் முடிவுகளை நெருக்கமாக கண்காணிக்கும். விளைவுகளைப் பொறுத்து, மாறும் சூழ்நிலையைப் பிரதிபலிக்குமாறு முடிவுகளின் கட்டமைப்பு மாற்றியமைக்கப்படும். மாற்றங்கள் வருடாந்த 3- வருட சுழலும் நாட்டின் செயல்பாடுகள் வணிகத்திட்டங்களில் பிரதிபலிக்கும்.

## ஈ. ஆபத்துக்கள்

51. நா.கூ.மூ. ஒரு கணிசமான அளவு அபாயங்களின் சுற்றுச்சூழலில் உருவாக்கப்பட்டுள்ளது, அது நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவு மற்றும் தாக்கத்தை உள்ளாற்றலைக் கொண்டுள்ளது. இரண்டு முக்கியமான சாத்தியமுள்ள ஆபத்துக்களாவன;

(i) **பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்பதில் தாமதம்,** பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை மீட்பதற்காக ச.நா.நி. இன் நீ.நி.வ. நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான முன்னேற்றம் அரசியல் ரீதியாக உணர்திறன்மிக்க கொள்கை முடிவுகளை எடுப்பதற்கு அரசாங்கத்தின் இயலாமையின் காரணமாக

அட்டவணைப் படுத்தப்பட்ட படி தொடர முடியாமல் போகலாம். இது பொது முதலீடுகளை மேற்கொள்வதில் அரசாங்கத்தின் திறன் மற்றும் தொடரும் திட்டங்களுக்கு போதுமான சரிநிரப்பு நிதிகள் வழங்குவதனைக் கட்டுப்படுத்தக்கூடும். தனியார் முதலீடுகள் கூட மோசமாகப் பாதிக்கப்படும். இருந்தபோதிலும், தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு சீர்திருத்தங்களை அட்டவணைப் படுத்தப்பட்ட படி தொடர்வதற்கான ஒரு வலுவான அர்ப்பணிப்பைக் காட்டுகின்றது. பெறுமதி-சேர்க்கப்பட்ட-வரியினது ஒரு முக்கிய சீர்திருத்தம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டிருக்கின்றது. ஏனைய வரி சீர்திருத்த நடவடிக்கைகள் தேசிய பாதீடு 2017 இல் அறிவிக்கப்பட்டன. அரச- உடமை நிறுவனங்களின் சீர்திருத்தங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு, அபிவிருத்திப் பங்காளர்கள் அவர்களின் குறித்த பிரதேசங்களின் செயல்பாடுகளில் சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் உதவுவதற்கு நெருக்கமாகப் பணியாற்றுகின்றனர்.

**(ii)** **ஆ.அ.வ. செயல்பாடுகளுக்கு புதிய நிறைவேற்று நிறுவனங்களின் பலவீனமான செயல்படுத்தற் திறன்.** நிகழ்ச்சித்திட்டங்கள் புதிய பரப்புக்களை சம்பந்தப்படுத்துகின்ற போது (புகையிரதங்கள், மாநகராட்சிகள், சுகாதாரம், மற்றும் மீன்பிடி), ஆ.அ.வ. புதிய நிறைவேற்று மற்றும் செயல்படுத்தல் நிறுவனங்களுக்கு பயிற்சி, சிறந்த நடைமுறைகளைப் பகிர்வதற்கான பட்டறைகள், மற்றும் நாளாந்த செயல்பாடுகள் ஊடான கை-கோர்க்கும் பயிற்சி உட்பட இலக்குவைக்கப்பட்ட திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஆதரவளிக்கும்.

## நாட்டு கூட்டாண்மை மூலோபாய விளைவுகள் கட்டமைப்பு

**நா.கூ.மூ. உடன் சீராக்கப்பட்ட நாட்டின் அபிவிருத்தி தாக்கக் குறிகாட்டிகள்:**

(i) ஒரு மில்லியன் வேலைகள் உலுவாக்கப்பட்டன; (ii) வருமான மட்டங்கள் உயர்த்தப்பட்டன; (iii) கிராமப்புற பொருளாதாரங்கள் வளர்ச்சியடைந்தன

| நா.கூ.மூ. குறிக்கோள்களும் தொடர்பான தாக்கங்களும் | நா.கூ.மூ. முன்னுரிமை பரப்புகள் | ஆ.அ.வ. பங்களிப்புச் செய்யும் முக்கிய விளைவுகள் | விளைவு குறிகாட்டிகள் | நா.கூ.மூ. வளங்கள் |
|---|---|---|---|---|
| பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டின் பன்முகப்படுத்தலுடன் வளர்ச்சியின் இயக்கிகள் வலுவூட்டப்படல் | வளர்ச்சி-சார்ந்த உள்கட்டமைப்பு வழங்கலை விரிவாக்குதல்<br><br>பொருளாதார இடைவழி ஏற்படுத்தப்படுவதற்கு ஆதரவளித்தல்<br><br>மனித மூலதனத்தை தரமுயர்த்துதல்<br><br>தனியார்த்துறை அபிவிருத்தி மற்றும் பொது தனியார் ஊட்டாண்மையை மேம்படுத்தல் | **சக்தித் துறை**<br>நிலைபேறானஅபிவிருத்தி மற்றும் சக்தி வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டின் ஊடாக மேம்படுத்தப்பட்ட மின்சார சேவைகளுக்கான ஒதுக்கீடு<br><br>**நகர மற்றும் நீர்த்துறை**<br>பெருமளவில் கிடைக்கக்கூடியதும் நம்பகரமானதுமான மேம்படுத்தப்பட்ட நகர நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள்<br><br>**போக்குவரத்துத் துறை**<br>மிகவும் வினைத்திறனான, நிலைத்திருக்கக் கூடியதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சிறந்த இணைப்பு வசதிகள்<br><br>**கல்வி துறை**<br>பொருத்தமானதும் உயர்தரமானதுமான இரண்டாம்நிலைக் கல்வி, திறன்கள் மேம்பாட்டு நிகழ்ச்சிகள், மற்றும் தொழில்-சார்ந்த உயர் கல்விக்கான மேம்படுத்தப்பட்ட சமத்துவமான அணுகல்<br><br>பொ.த.கூ. | **2022 ஆம் ஆண்டளவில்**<br>• தொகுதியின் விநியோக கொள்திறன் 6,367 மெகா வாற் இற்கு அதிகரித்தது (2015 ஆண்டின் அடிப்படை: 3,847 மெகா வாற்) – நிலைபேறான அபிவிருத்தி இலக்கு (நி.அ.இ.) 7<br>• பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்தான சக்தி விநியோகம் 20.0 இற்கு அதிகரித்தது (2015 ஆம் ஆண்டு அடிப்படை: 11.0) – நி.அ.இ. 7, நி.அ.இ. 8<br>• இலங்கை மின்சார சபைக் கட்டமைபின் தொகுதி இழப்புகள் தேறிய உற்பத்தியின் (2015 ஆம் ஆண்டு அடிப்படை: 9.9%) 8.0% ற்கு குறைக்கப்பட்டன – நி.அ.இ. 7<br>• குழாய் நீர் விநியோகத்திற்கான அணுகல் 60% க்கு அதிகரித்தது (2015 ஆம் ஆண்டின் அடிப்படை: 46%) – நி.அ.இ. 3, நி.அ.இ. 6<br>• மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளிற்கான அணுகலின் விகிதம் 100% ற்கு அதிகரித்துள்ளது (2015 ஆம் ஆண்டு அடிப்படை: 87%) – நி.அ.இ. 3, நி.அ.இ. 6<br>• குழாய் கழிவுநீரகற்றல் வசதிகளிற்கான அணுகல் நகர மக்கள்தொகையின் 7% ற்கு அதிகரித்தது (2015 ஆம் ஆண்டின் அடிப்படை: 2%) நி.அ.இ. 3, நி.அ.இ. 6<br>• கொழும்பு மாநகரப் பிரதேசத்தில் தோற்றுவிக்கப்படும் 1,000 தொன்கள் மாநகர திண்மக் கழிவுகள் வினைத்திறனாக அகற்றப்படும் (2015 ஆம் ஆண்டின் அடிப்படை: நாளொன்றிற்கு 349 தொன்கள்) – நி.அ.இ. 11<br>• புகையிரத பயணிகள் போக்குவரத்தின் பங்கு 2015 ஆம் ஆண்டில் 5% ஆக இருந்தது 6% ஆக அதிகரித்தது – நி.அ.இ. 11<br>• புகையிரத சரக்குப் போக்குவரத்தின் பங்கு 2015 ஆம் ஆண்டில் 1% ஆக இருந்தது 2% ஆக அதிகரித்தது – நி.அ.இ. 9<br>• கொழும்புத் துறைமுகத்தின் சரக்கு கையாள்கையின் கொள்ளளவு 2015ஆம் ஆண்டில் 5.2 மில்லியன் TEU களிலிருந்து 7.6 மில்லியன் TEU களாக அதிகரித்தது – நி.அ.இ 8, நி.அ.இ. 9<br>• சர்வதேச வணிக வசதிகள் மற்றும் பொருளாதார நிலையங்களுக்கு இடையிலான அதிவேகப்பாதைத் இணைப்பு (துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள்) மேம்படுத்தப்பட்டது – நி.அ.இ. 8, நி.அ.இ. 9<br>• தேசிய தொழில்சார் பட்டதாரிகளின் வேலைகொள் விகிதம் 2015 ஆம் ஆண்டில் 57% இலிருந்து (பெண்கள்: 47% / ஆண்கள்: 64%) 62% (பெண்கள்: 50% / ஆண்கள்: 65%) ஆக அதிகரித்தது. நிஅஇ 4, நி.அ.இ. 8, நி.அ.இ. 9<br>• தொழில்நுட்பத்துறையில் வேலைகொள் விகிதம் 2015 ஆம் ஆண்டில் 7.41% இலிருந்து 10% ஆக அதிகரித்தது – நி.அ.இ. 4<br>• இளைஞர்களின் (15-24 வயதுகள்) வேலைவாய்ப்பின்மை விகிதம் 2012 ஆம் ஆண்டில் 17.8% (15.7% ஆண்கள்; 21.6% பெண்கள்) இலிருந்து 2021 இல் 12% இற்கு குறைந்தது – நி.அ.இ. 4, நி.அ.இ. 8, நி.அ.இ. 9<br>• மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தனியார் முதலீடு அதிகரித்தது – நி.அ.இ. 8, நி.அ.இ. 17 | **தொடரும் பிரிவு**<br>தொடரும் இறையாண்மை கடன்கள் (31 திசெம்பர் 2016 அன்றிருந்தவாறு)<br>எண்ணிக்கை: 51<br>தொகை: $3.5 பில்லியன்<br><br>தொடரும் தொழில்நுட்ப உதவி (31 திசெம்பர் 2016 அன்றிருந்தவாறு)<br>எண்ணிக்கை: 18<br>தொகை: $19.9 மில்லியன்<br><br>**திட்டமிடப்பட்ட செயல்பாடுகள் மற்றும் பங்களிப்புக்கள்:**<br>இறைமைக்கடன்: $4 பில்லியன் -$5 பில்லியன் 2018-2022 ஆம் ஆண்டுகளுக்காக<br><br>தொழில்நுட்ப உதவி: $40 பில்லியன் 2018-2022 ஆம் ஆண்டுகளுக்காக |

| நா.கூ.மூ. குறிக்கோள்களும் தொடர்பான தாக்கங்களும் | நா.கூ.மூ. முன்னுரிமை பரப்புகள் | ஆ.அ.வ. பங்களிப்புச் செய்யும் முக்கிய விளைவுகள் | விளைவு குறிகாட்டிகள் | நா.கூ.மூ. வளங்கள் |
|---|---|---|---|---|
| | | உருவாக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் ஒருவிதிக் கட்டமைப்பு; கல்வி, சுகாதாரம், மற்றும் உள்கட்டுமானத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பொ.த.கூ. கள் | | |
| உள்ளடக்குந்தன் மையினை ஊக்குவிப்பதற்கு வளர்ச்சியின் தரம் மேம்படுத்தப்படல் | விவசாய உள்கட்டுமானத்தை பலப்படுத்தி வர்த்தகமயப்படுத்தல்<br><br>கிராமப்புற இணைப்பினை மேம்படுத்தல்<br><br>பொது சேவை விநியோகத்தின் தரத்தினை மேம்படுத்துதல்<br><br>சி.ந.நி. களுக்கு நிதி அணுகலை விரிவாக்குதல்<br><br>பால் சமத்துவம் மேம்படுத்தப்பட்டது | **விவசாயம், இயற்கை வளங்கள், மற்றும் கிராம அபிவிருத்தித் துறை**<br>நீர் வளங்களுக்கான அணுகல் பாதுகாக்கப்பட்டது மற்றும் மீன் உற்பத்தி மேம்படுத்தப்பட்டது<br><br>**போக்குவரத்து**<br>கிராம அணுகல் சாலைகள் மற்றும் புகையிரதம் சார்ந்த பொதுப் போக்குவரத்து மேம்படுத்தப்பட்டன<br><br>**நகர்புறம் மற்றும் நீர் துறை**<br>பாதுகாப்பான குடிநீருக்கான அணுகல் விரிவாக்கப்பட்டது<br><br>**சமூகத்துறை**<br>பாடசாலைக் கல்விக்கான அணுகல் மற்றும் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மேம்படுத்தப்பட்டன<br><br>பெருந்தோட்டத் துறையில் சுகாதாரப் பராமரிப்பு விநியோக முறைமை மேம்படுத்தப்பட்டது<br><br>**நிதித் துறை**<br>சி.ந.நி. களின் நிதிக் கான அணுகல் வலுவாக்கப்பட்டது. | **2022 ஆண்டளவில்**<br>☐ 358,000 மக்களுக்கான 70 மி.க.மி./வருடம் மூல நீர் உட்பட, வட மத்திய மாகாணத்தில் 974 மி.க.மி./வருடம் நீர் கிடைக்கக்கூடியதாக இருத்தல் (2014 ஆம் ஆண்டு அடிப்படை: குடிநீருக்கான 0 மி.க.மி./ வருடம் உடன் 60 மி.க.மி./வருடம்) – நி.அ.இ. 2, நி.அ.இ. 6<br>☐ வட மேல் மாகாணத்தில் 130 மிகமி/வருடம் நீர் கிடைக்கக்கூடியதாக இருத்தல் (2015 ஆம் ஆண்டு அடிப்படை: 0 மிகமி) – நி.அ.இ. 2, நி.அ.இ. 6<br>☐ மஹாவலி தொகுதியினால் சேவையாற்றப்படும் நீர்ப்பாசனப் பிரதேசம் 191% பயிரிடற் செறிவுடன் 162,000 ஹெ ஆக அதிகரிக்கப்படல் (2014 ஆம் ஆண்டு அடிப்படை: 146,000 ஹெ மற்றும் 188% ) – நி.அ.இ. 2, நி.அ.இ. 6<br>☐ கடல்சார் மீன் உற்பத்தி வருடம் ஒன்றிற்கு 85,000 தொன்கள் அதிகரிக்கப்பட்டிருத்தல் (2015 ஆம் ஆண்டு அடிப்படை: 72,560 தொன்) – நி.அ.இ. - 2<br>☐ நீர் வேளாண்மை உற்பத்தி வருடத்திற்கு 500 தொன்களாக அதிகரிக்கப்பட்டிருத்தல் ( 2015 அடிப்படை: 275 தொன்கள்)<br>☐ ஊவா, வடக்கு, கிழக்கு, மற்றும் கொழும்பு மாகாணங்களில் 1,500 கிராமங்களுடனான இணைப்பு மேம்படுத்தப்பட்டிருத்தல் - நி.அ.இ. 9<br>☐ புகையிரதப் பயணிகள் போக்குவரத்தின் பங்கு 6% ஆக அதிகரிக்கப்பட்டிருத்தல் (2015 அடிப்படை: 5%)<br>☐ பாதுகாப்பான குடிநீருக்கான அணுகல் 100% (2015 அடிப்படை: 86.0%) – நி.அ.இ. 3, நி.அ.இ. 6<br>☐ சாதாரண தரப் பரீட்சை சித்தி விகிதத்தில் மாவட்டங்கள் மற்றும்/அல்லது மாகாணங்கள் இடையேயான ஏற்றத்தாழ்வு 2015 இல் 14.8% இலிருந்து 7.0% ஆக குறைக்கப்பட்டது – நி.அ.இ. 4<br>☐ 1-11 தரங்களின் முடிவில் பிழைத்திருக்கும் விகிதச் சுழற்சி 2015 இல் 85.42% (88.5% மகளிர்/82.4% ஆண்கள்) இலிருந்து 87.0% இற்கு அதிகரித்தது (சிறந்த பால் சமத்துவத்துடன்) – நி.அ.இ. 4<br>☐ பெருந்தோட்டப் பெண்கள் இடையே வீட்டில் பிரசவித்தல் 2.2% இலிருந்து 0% ஆக குறைக்கப்பட்டது – நி.அ.இ. 3, நி.அ.இ.10<br>☐ பெருந்தோட்ட மக்கள்தொகையில் சிசு மரண விகிதம் 29 இலிருந்து 10 ஆக குறைந்தது – நி.அ.இ. 2, நி.அ.இ. 3, நி.அ.இ. 10<br>☐ சி.ந.நி. களுக்கான நிலுவையிலிருந்த வங்கிக் கடன் வருடம் ஒன்றிற்கு இ.ரூ. 843 பில்லியனில் இருந்து (செப்தெம்பர் 2016 இல் இருந்தவாறு) இ.ரூ. 1,204 பில்லியனுக்கு 7% இனால் அதிகரித்தது – நி.அ.இ. 1, நி.அ.இ. 5, நி.அ.இ. 8, நி.அ.இ. 9 | |

ஆ.அ.வ. - ஆசிய அபிவிருத்தி வங்கி, நா.கூ.மூ. - நாட்டிற்கான கூட்டாண்மை மூலோபாயம், ஹெ- ஹெட்டேயர், மி.க.மி. - மில்லியன் கன மீற்றர்கள், மெ.வா - மெகா வாற்று, பொ.த.கூ - பொது-தனியார் கூட்டாணமை, நிஅஇ - நிலைபேறான அபிவிருத்தி இலக்கு, இ.ரூ. - இலங்கை ரூபா, சி.ந.நி - சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், தொ.உ - தொழில்நுட்ப உதவி, இ.ச.அ. - இருபது அடி சம அலகு. மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கி

## நாட்டு அறிவுத் திட்டம்

### அ. அறிவுத் தேவைகள்

1. இலங்கை மேல் நடுத்தர வருமான நாடு (மே.ந.வ.நா.) என்ற தகுதியை அடையுந்தறுவாயில் உள்ளது. ஒரு மே.ந.வ.நா. ற்கான மாற்றத்தில் உதவுவதற்கு இலங்கை துறைகள் பூராகவும் அதிகரித்து வரும் உற்பத்தித் திறன், புதிய பொருட்களின் மேம்பாடு, மற்றும் அதிகம் சௌகரியமானதும் சிக்கலானதுமான சேவைகளை வழங்குதல் போன்ற பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். உற்பத்தித்திறனை மேம்படுத்துவது இலங்கைக்கும் உயர்- வருமான நாடுகளுக்கும் இடையே நிலவும் புதுமைகள் ஊடான அறிவு மற்றும் தொழில்நுட்ப இடைவெளிகளை பிணைத்தல்; சமகால தொழில்நுட்பத்தின் அறிமுகம்; மற்றும் கல்வி முறைமையில் மேம்பாடு, குறிப்பாக விஞ்ஞானத்தை நோக்கி இசைவாக்கப்பட்ட உயர் கல்வி. இலங்கை எஞ்சியுள்ள வறுமையை ஒழிக்கவும், நிலவிவரும் உயர்ந்துநிற்கும் சமத்துவமின்மையைச் சமாளிக்கவும் வேண்டியிருப்பதுடன் சுற்றுச்சூழல் சவால்களையும் தணிக்க வேண்டியுள்ளது. அதே நேரத்தில், அரசாங்கம் மிகப்பெரிய பொருளாதார ஸ்திரத்தன்மையை தேவையான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மீட்டெடுக்க வேண்டும், அவற்றில் பல சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதிகளின் பகுதியாகும்.

2. இலங்கை கிராமப்புற வீதிகள் மற்றும் மின்சாரத்திற்கான அணுகல் போன்ற அடிப்படை உள்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்துள்ளதுடன், நாடு முழுவதும் அடிப்படைக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றது. 2015 ஆம் ஆண்டில் கிராமப்புற மின்மயமாக்கல் விகிதம் 98% ஆக இருந்ததுடன், தொடரும் ஆ.அ.வ.- நிதியிடப்பட்ட திட்டத்தின் கீழ் 100% உள்ளடக்கத்தினைப் பெறும்[1]

3. இலங்கையில் சாலை அடர்த்தி அபிவிருத்தி அடைந்து வரும் ஆசியாவில் உயர்ந்ததொன்றாக உள்ளது. நாட்டினது மனித அபிவிருத்திச் சுட்டி ஒத்த தனிநபர் வருமானத்துடனான நாடுகளுக்கான சராசரியை விட சிறந்ததாக உள்ளது, மற்றும் இது ஒரு உயர்ந்த மனித வள அபிவிருத்தி நாடாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும், இடைக்காலத்திற்கு மேல் நீண்டகாலத்திற்கு பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கு, உள்கட்டுமானத்தின் கிடைக்கக்கூடிய தன்மை மற்றும் தரம் மேம்படுத்தப்பட வேண்டும், மற்றும் உயர் கல்வி மற்றும் ஆராய்சித் திறன் வலுப்படுத்தப்பட வேண்டும்.

4. ஒரு வளர்ந்துவரும் மே.ந.வ.நா. இனது தேவைகளுக்கு ஆதரவளிப்பதில் அறிவு ஒரு முக்கிய பாகத்தை வகிக்கின்றது. பொருளாதாரத் திட்டமிடல் உயர்தர உள்கட்டமைப்பிற்கான அமைவிடங்களின் தெரிவு முன்னுரிமைகள், மற்றும் எதிர்கால சந்தையின் தேவைகளைச் சந்திப்பதற்கு கல்வித் துறையில் கவனிக்கப்பட வேண்டிய பரப்புகளை வழிநடத்தும். இது மட்டுப்படுத்தப்பட்ட பொது வளங்களை உயர்ந்தபட்ச திரும்பல்களை உருவாக்கும் பரப்புகளில் பயன்படுத்தப்படுதல் மற்றும், வன் மற்றும் மென் உள்கட்டுமானத்தில் பொதுச் செலவினத்தின் வினைத்திறனைப் பேணுவதனை இயலச் செய்யும். மேலும், துரித பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கு பாரிய தனியார்த்துறைப் பங்கேற்பு, உள்நாடு மற்றும் வெளிநாடு இரண்டும், கணிசமான அளவு தேவைப்படும் காரணத்தினால் வணிகச் சூழல் மேம்படுத்தப்பட வேண்டும். இலங்கை கொள்கைகளை அமுல்படுத்துதல் மற்றும் பொருளாதார கட்டமைப்பு மாற்றத்திற்கு வசதியளிக்கும் நிறுவனங்களை ஏற்படுத்துகின்றமையால், பிற நாடுகளின் வெற்றிகரமான அனுபவங்களில் இருந்தான பாடங்கள் கொள்கைகளை உருவாக்குவது மற்றும் நிறுவனத்தினை மறுசீரமைப்பதில் உள் அறிவினை வழங்கும். வெற்றிகரமான ஆசிய நாடுகளின் அனுபவங்கள் பற்றிய ஆ.அ.வ. யின் அறிவு இந்த செயல்முறையில் முக்கிய காரணியாக இருக்கும்.

5. ஒரு மே.ந.வ.நா. மாற்றத்திற்கு வசதியளிப்பதற்கு, எந்தத் துறைகள் எதிர்கால அபிவிருத்திக்கான உள்ளாற்றலைக் கொண்டிருக்கின்றன மற்றும் அதன் பொருத்தமான அமைவிடங்கள் பற்றி அரசாங்கம் ஒரு தெளிவான எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டும். உயர்தரத் தொழில்நுட்பம் மற்றும் இலங்கைக்குப் பொருத்தமான சிறந்த நடைமுறைகள் பற்றிய அறிவும் கூட அவசியமாகவிருக்கும். இந்த நோக்கத்திற்காக, பல்வேறு துறைகளில் தொழில்முறை அறிவை உடைய தொழில்நுட்ப வல்லுனர் குழுவினை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்தக் குழுக்கள் குடிசார் சேவையாளர்களிடையே புதுமையான சிந்தனைகளை ஊக்குவிப்பது, உலகளாவிய சிறந்த நடைமுறைகள் பற்றிய அறிவினைப் பகிர்தல், மற்றும் கொள்கை ஆக்கத்தில் அவற்றின் பிரயோகங்களை ஊக்குவித்தல் என்பனவற்றில் ஒரு முக்கிய பாகத்தை வகிக்கும்.

6. வறுமை விகிதம் மேலும் வீழ்சியடைகின்றபோது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வகிபாகம் பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த அளவிலான சேவையைப் பெறும் மக்கள்தொகையின் பாதுகாப்பினை அதிகரிக்கும். அடிப்படை சமூக சேவைகள் வழங்கல் மேம்படுத்தப்படுகின்றமை, மற்றும் புவியியல் சமத்துவமின்மைகள் தீர்க்கப்படுகின்றமை காரணமாக, உள்ளடக்குந்திறனை உறுதிப்படுத்துவதற்கு கொள்கை

---

[1] ஆ.அ.வ. 2016. பணிப்பாளர்கள் சபைக்கு தலைவரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள்: இலங்கை மின்சார சபை மின்சார விநியோக நம்பகரத்தன்மையை மேம்படுத்தும் திட்டத்திற்காக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கான முன்மொழியப்பட்ட கடன் மற்றும் மானிய நிர்வாகம். மணிலா.

நடவடிக்கைகளின் அழுத்தம், பணப் பரிமாற்ற திட்டங்கள், சமூகக் காப்புறுதி, மற்றும் தொழிற் சந்தையில் உள்ள உருச்சிதைவுகள் குறைக்கப்படுகின்றமை ஆகியனவற்றை நோக்கி நகர்த்தப்படும். இலங்கை ஒரு மூப்படைந்து வரும் சமுதாயமாக இருப்பதனால், சமூகப் பாதுகாப்புச் செலவினம் அதிகரிக்கும். ஒரு முதல் படிமுறையாக, பலாபலன்கள் மற்றும் கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியமான ஒழுங்கமைப்புகளின் சீர்திருத்தங்களைத் தீர்மானிப்பதற்கு தற்போதைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் அடைவு என்பனவற்றை மதிப்பிடுவதற்கு அறிவுசார் உற்பத்திப் பொருட்கள் தேவையாக உள்ளன.

7. நிலைபேறான அபிவிருத்திக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு அவசியம். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களின் காப்பினை நிர்வகிப்பதற்கான அறிவுரைகள் அரசாங்கத்திற்குத் தேவையாக உள்ளன. புதுப்பிக்கத்தக்க சக்தியை உருவாக்குவது ஒரு விரும்பத்தக்க படிமுறையாக உள்ளது, ஆனால் காலநிலை மாற்றத்தின் சவால்களைச் சமாளிப்பதற்கு வேறு நடவடிக்கைகளும் கூடத் தேவையாக உள்ளன.

**ஆ. ஆ.அ.வ. யின் திட்டமிடப்பட்ட அறிவுசார் நடவடிக்கைகளின் செயலெல்லை**

8. தொடரும் மற்றும் திட்டமிடப்பட்ட அறிவுத் தீர்வுகள் அறிவுசார் சேவைகள் மற்றும் அறிவுசார் உற்பத்திகளைக் கொண்டுள்ளன. ஆ.அ.வ. யில் உள்ள அனைத்துப் பொருத்தமான திணைக்களங்களும், அத்துடன் ஆ.அ.வ. நிறுவனம், இந்த சேவைகள் மற்றும் உற்பத்திகளினைத் திட்டமிடுதல் மற்றும் விநியோகிப்பதில் பங்களிப்புச் செய்யும். நா.கூ.மூ. 5 வருடங்களை உள்ளடக்குவதனால், முழுக் காலப்பகுதிக்கும் ஒரு விரிவான அறிவுத் திட்டத்தினை முன்கூட்டியே தீர்மானிப்பது கடினமாக உள்ளது. உள்வாரி மற்றும் வெளிவாரி சூழலில் ஏற்படும் மாற்றங்கள் திட்டத்தினைச் சரிசெய்ய வேண்டிய ஒரு தேவையைத் தூண்டலாம், ஆகவே இது ஒரு நெகிழ்வான முறையில் உருவாக்கப்பட்டு இருப்பதுடன், நாட்டின் உருவாகும் அறிவுத் தேவைகளுக்குப் பதிலளிக்குமாறு கண்காணிக்கப்பட்டு சரிசெய்யப்படும்.

9. **அறிவுசார் சேவைகள்.** ஆ.அ.வ. இலங்கை மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் உறுப்பு நாடுகள் சம்பந்தப்பட்ட பயிற்சி மற்றும் அறிவுப்-பகிர்வு நிகழ்ச்சிகளை வழங்கும். இவை துறை மன்றங்கள் (போக்குவரத்து மன்றம், நீர் வள மன்றம், சக்தி மன்றம், நகர மன்றம், மற்றும் கல்வி மற்றும் திறன் மன்றம்), அத்துடன் கருப்பொருள் மன்றங்கள் மற்றும் பட்டறைகள் (பாதுகாப்புகள், பால், காலநிலை மாற்றம், மற்றும் ஊழல்எதிர்ப்பு) ஆகியவற்றினை உள்ளடக்கலாம். குறித்த தலைப்பு சார்ந்த பட்டறைகள் (அபிவிருத்திக் கண்ணோட்டம் தயாரித்தல், பெண்கள் தலைமைத்துவம், பேரினப் பொருளாதார முகாமைத்துவம், மற்றும் நிதிக் கொள்கைகள்) கூட தொடரப்படும்.

10. **ஒட்டுமொத்த பொருளாதாரச் சவால்கள்.** நாடு கண்டறியும் ஆய்வு (நா.கா.ஆ.) மற்றும் வேலைவாய்ப்பு கண்டறியும் ஆய்வு ஆகியன ஆ.அ.வ. யின் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்றன. இந்த ஆய்வுகள் ஒரு மே.ந.வ.நா. என்ற அதன் மாற்றத்தில் இலங்கையினால் எதிர்கொள்ளப்படும் சாத்தியமுள்ள பின்வருவன போன்ற பிரதான தடைகளை ஆராய்கின்றது: (i) இலங்கையின் நிதிச் சவால்கள்: ஒரு சர்வதேச கண்ணோட்டம்; (ii) இலங்கையில் உள்ள அரச-உடமையான நிறுவனங்களை வலுப்படுத்துதல் - முன்நோக்கிச் செல்லும் வழி; (iii) இலங்கையின் உற்பத்திசெய்யப்படும் ஏற்றுமதிகள் பற்றிய ஒரு கண்டறியும் ஆய்வு – சந்தர்ப்பங்கள், அடைவுகள், மற்றும் கொள்கைத் தெரிவுகள்; (iv) இலங்கையில் சேவைகள் துறை – போட்டித்திறன் மற்றும் வளர்ச்சியின் இயக்கிகள்; (v) இலங்கையில் விவசாயத்தை நவீனமயப்படுத்துவதில் சவால்கள் மற்றும் சந்தர்பங்கள்; (vi) இலங்கையின் நகரமயமாக்கல் மற்றும் நகர அபிவிருத்திக்கு நிதியளித்தல் மற்றும் பேணல்; (vii) ஊதியக் கொள்கைகள் மற்றும் தொழிற்றுறை தொடர்புகள்; (viii) திறன்கள் மற்றும் உயர் கல்வி; (ix) மூப்படைதலும் அதன் தாக்கங்களும். ஆய்வுகள் பூர்த்தியாக்கப்பட்டு பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டவுடன், ஆ.அ.வ. செயற்பாடுகளில் அரசாங்கத்துடன் பின்தொடர் நடவடிக்கைகள் தொடரப்படும்.

11. **தனியார்த் துறை அபிவிருத்தி.** பொருளாதாரத் திட்டமிடல் மற்றும் வியாபார சூழலை மேம்படுத்துவதில் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்குதல் என்பனவற்றில் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்குப் பின்வரும் ஆய்வுகள் திட்டமிடப்பட்டிருக்கின்றன.

(i) **பொருளாதார பாதை ஆய்வு**. பொருளாதாரப் பாதை ஆய்வு, கொழும்பு-திருகோணமலை

பாதை தொடர்பில் கவனம் செலுத்தி, எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை இயக்கக் கூடிய உள்ளாற்றலுள்ள துறைகளை ஆராய்தல், மற்றும் அவை மிகவும் வினைத்திறனாக அமையக்கூடிய இடங்களை அடையாளப்படுத்துதல். இந்த ஆய்வின் முடிவுகள் உயர் உள்கட்டமைப்பினை அமைக்கக்கூடிய இடங்கள் மற்றும் உயர் கல்விக்கான இலக்குப் பரப்புக்களை திட்டமிட அரசாங்கத்திற்கு உதவும்.

(ii) **இலகு உற்பத்தி, கட்டுமானம், மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் மதிப்புச் சங்கிலி தொடர்பான ஆய்வு**. இந்த ஆய்வு தொடரும் சிறிய மற்றும் நடுத்தர- அளவிலான நிறுவனங்கள் கடன் திட்டத்துடன்[2] இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உதவியினால் (தொ.உ.) நிதியளிக்கப்படுகின்றது.

(iii) **நீதித் துறை சீர்திருத்தம்.** ஆ.அ.வ. யின் பொது ஆலோசனை அலுவலகத்தின் தொ.உ. யின் கீழ் ஒரு தேவை மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன் நீதித்துறை சீர்திருத்தங்களுக்கான ஒரு சாலை வரைபடம் தயாரித்தல். அது தனியார்த்துறை அபிவிருத்திக்கு உதவுவதற்கு வணிகச் சட்டம் தொடர்பில் முதன்மையான அவதானத்தைச் செலுத்தும்.

12. **உட்கட்டுமானத்தை வழங்குதல்,** உள்கட்டுமானத் திட்டங்களை சிறப்பாகத் திட்டமிடுவதில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கு, சக்தி மற்றும் போக்குவரத்துத் துறைகளில் பின்வரும் அறிவுசார் உற்பத்திகள் தயாரிக்கப்படும்.

(i) **சக்தித் துறை மதிப்பீடு.** இது எதிர்கால அபிவிருத்தித் திசைகள் தொடர்பில் கொள்கைப் பரிந்துரைகளை வழங்கும், இலங்கையின் சக்தித் துறை பற்றிய ஒரு விரிவான ஆய்வு.

(ii) **இலங்கையில் காற்று மின்சக்தி அபிவிருத்தி.** இது இலங்கையில் காற்று மின் உற்பத்தியில் மேம்பாடுகளைச் சமர்ப்பிப்பதுடன், நாட்டில் எதிர்கால மின் உற்பத்தி விரிவாக்கத்திற்கு காற்று மின்சக்தி உற்பத்தியின் அனுபவங்கள் மற்றும் பாடங்களை பகுப்பாய்வு செய்கின்றது.

(iii) **துறைமுக பெருந்திட்டம்.** இந்தப் பெருந்திட்டம், கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கான விரிவான திட்டங்களுடன், முழு துறைமுகங்கள் துறையையும் ஆராயும்.

(iv) **புகையிரதப் பெருந் திட்டம்.** இந்தத் திட்டம் முதலீடுகளை முன்னுரிமைப்படுத்தி பொது-தனியார் கூட்டாண்மைக்கான பகுதிகளை அடையாளப்படுத்துகின்றது. இது நிறுவனம்சார் வலுவூட்டல் மற்றும் கட்டண வரி மற்றும் செலவுப்-பகிர்வு (அரச உதவிப்படி) கட்டமைப்பில் சீர்திருத்தங்களை உள்ளடக்கும்.

(v) **நீர் சுத்திகரிப்புப் பொறி செயல்பாடுகள்**. இது அனுபவங்கள் மற்றும் ஒரு முன்னோடித் திட்டத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை உள்ளடக்கும்.

13. **மனித மூலதன அபிவிருத்தி.** இலங்கை சந்தை தேவையைச் சந்திப்பதற்காக இரண்டாம்நிலை கல்வி மற்றும் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சியை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (த.தொ.தொ.), மற்றும் ஆங்கிலக் கல்வி என்பனவற்றின் மீது பெருமளவு கவனம் செலுத்தி மீளமைக்கின்றது. உயர் கல்வி சமகால தொழில்நுட்ப மாற்றங்களை உள்வாங்குவதற்காகத் தயார்படுத்துவதற்கு மற்றும் அறிவு உருவாக்கம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக நாட்டின் திறனைத் தரமுயர்த்துவதற்கு வலுவூட்டப்பட வேண்டும். பின்வரும் பரப்புக்களை உள்ளடக்கி ஒரு ஆய்வு மேற்கொள்ளப்படும்: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பட்டதாரிகளுக்கான தேவைப் பகுப்பாய்வு; இரண்டாம்நிலை பாடசாலைப் பட்டதாரிகள் பற்றி ஒரு தட ஆய்வு; இரண்டாம்நிலை, தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி, மற்றும் உயர் கல்வி பட்டதாரிகளின் தொழில்கொள்வோர் பற்றிய ஒரு கருத்துக் கணிப்பு; மற்றும் உயர் கல்வி நிதியிடற் பொறிமுறைகள்.

14. **உள்கட்டுமானத் துறை நிறுவனங்களை வலுவூட்டல்.** உள்கட்டுமானத் துறை நிறுவனங்களை வலுப்படுத்துதல் தனியார்த் துறையின் பாரிய பங்கேற்பிற்கு முக்கியமானதாகும். இது நிதி இழப்புக்களைக் குறைக்கும், நிதி மற்றும் முகாமைத்துவச் சுதந்திரத்தை அதிகரிக்கும், மற்றும் பாதீட்டின் மீதான சுமையைக் குறைக்கும். பொது-தனியார் கூட்டாண்மை பொது முதலீட்டுத் தேவைகளைக் குறைப்பதற்கு மற்றும் பொதுச் சேவை வழங்கலில் தனியார் வினைத்திறனை அறிமுகப்படுத்துவதற்கு ஆராயப்படும். அறிவு மாற்றம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியனவும் சம முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். இந்தத் துறையில் தொடரும் மற்றும் திட்டமிடப்பட்ட அறிவு செயல்பாடுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

(i) நா.க.ஆ. இலங்கை மின்சார சபை (இ.மி.ச.), இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை என்பன தொடர்பில் ஆய்வுகளை மேற்[illegible] பின் இணைப்பு 2 [illegible]தப் பரிந்துரைகள் ஆ.அ.வ. யின் செயல்பாடுகளில் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஆராயப்படும்.

(ii) ஆ.அ.வ. - ஆதரவளிக்கப்பட்ட உள்கட்டமானத் திட்டங்களில் நிறுவன ரீதியிலான வலுப்படுத்தல் மேற்கொள்ளப்படும். இலக்காகக் கொண்ட அரச-உடமை நிறுவனங்கள் இ.மி.ச., இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை, இலங்கைப் புகையிரதம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, மற்றும் அதிவேகப் பாதை அதிகார சபை (தாபிக்கப்பட வேண்டும்) என்பனவற்றை உள்ளடக்கும்.

---

[2] ஆ.அ.வ.. 2016. பணிப்பாளர் சபைக்கு தலைவரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள்: இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சிறிய மற்றும் நடுத்தர- அளவிலான நிறவனங்களுக்கான கடன் திட்டத்திற்கு முன்மொழியப்பட்ட கடன் மற்றும் தொழில்நுட்ப உதவி மானிய நிர்வாகம். மணிலா.

(iii) இ.மி.ச. ற்கு அரசாங்க உத்தரவாதத்துடனான நேரடிக் கடன் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இ.மி.ச. வின் நிதி முகாமைத்துவத் திறன் அதிகரிக்கப்படும், அதனால் அது அரசாங்க உத்தரவாதமின்றி எதிர்காலத்தில் ஆ.அ.வ. யிடமிருந்து கடன் பெற முடியும்.

(iv) இலங்கைப் புகையிரத சேவையின் நிறுவன ரீதியான அபிவிருத்தி, கொள்வனவு, மற்றும் பாதுகாப்புகள் அமுலாக்கம் உள்ளடங்கலான, திட்ட முகாமைத்துவம் ஆகியனவற்றிற்கு திறன் மேம்பாட்டு தொ.உ[3] வழங்கப்படும்.

(v) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் நிறுவன ரீதியான திறன் மேம்பாட்டினை வலுப்படுத்துவதற்கு தொடரும் திறன் மேம்பாட்டு தொ.உ. தொடர்ந்து ஆதரவளிக்கும்.

(vi) அதிவேகப் பாதை செயல்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தின் நிறுவன ரீதியான வலுப்படுத்தலுக்கான தொ.உ. அதிவேகப் பாதை கூட்டுத்தாபனத்தினைத் தாபிப்பதற்கு ஆதரவளிக்கும்.

15. **உள்ளடக்குந்திறனை ஊக்குவித்தல்.** கீழே தரப்பட்டுள்ள அறிவுசார் செயல்பாடுகள் இலங்கையில் உள்ளடங்கிய வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்குப் பங்களிக்கும்.

(i) முதியோர் பராமரிப்பில் அபிவிருத்தியடையும் உறுப்பு நாடுகளின் வலுவூட்டல். பிராந்திய தொ.உ. ஆ.அ.வ. யின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் காலநிலை மாற்றத் திணைக்களம் இலங்கைக்கான ஒரு நாடு கண்டறியும் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றது.[4]

(ii) சமூகக் காப்புறுதி தொடர்பான ஆய்வு. மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உதவியினால் நிதியிடப்பட்ட, இந்த ஆய்வு, உள்ளடக்குந்திறனை அதிகரிப்பதற்கு சமூகக் காப்புறுதி அபிவிருத்தியினை மீளாய்கின்றது.[5]

(iii) இலகு உற்பத்தி, கட்டுமானம், மற்றும் த.தொ.தொ. இல் மதிப்புச் சங்கிலி தொடர்பான ஆய்வு.

(iv) சி.ந.நி. களின் கடன் உத்தரவாத நிறுவனம் தொடர்பான ஆய்வு.

(v) நா.கஆ. மூப்படைதல் தொடர்பான தலைப்பு இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறைமைக்கு அதன் தாக்கங்களை ஆராய்கின்றது.

(vi) வேலைவாய்ப்பு கண்டறியும் ஆய்வு. தொழிலாளர் படையில் பெண் தொழிலாளர்கள் (குறைந்த பெண் தொழிலாளர் பங்கேற்பு) மற்றும் இளைஞர்களை (உயர்ந்த வேலையின்மை விகிதம்) ஊக்குவிப்பதன் மூலம் எவ்வாறு தொழில் முட்டுக்கட்டைகளை எதிர்கொள்வது என்பது பற்றி இந்த ஆய்வு ஆராய்கின்றது.

16. **சுற்றுச்சூழல் முகாமைத்துவம்.** சுற்றுச்சூழல் முகாமைத்துவம் - பாதுகாப்பு, பின்பற்றல், மற்றும் தணிப்பு உள்ளடங்கலாக - இலங்கையில் நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானது.

(i) முறைமை வினைத்திறன்கள் மற்றும் நீர் உற்பத்தித்திறன் மேம்படுத்துவது தொடர்பான ஆய்வு. இந்த ஆய்வானது கொண்டு செல்லுதல் மற்றும் நீர்ப்பாசன முறைமைகளில் உள்ள குறைபாடுகளை விசாரிப்பதுடன் நீர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் உள்ள முட்டுக்கட்டைகள், மற்றும் பண்ணை- மற்றும் தொகுதி-முழுவதுமான மேம்பாடுகள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்கும்.

(ii) ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வளங்கள் முகாமைத்துவத்துடன் நிறுவனங்களை வலுவூட்டுவது தொடர்பான ஆய்வு. இது நவீனமயப்படுத்தப்பட்ட கொள்கை மற்றும் ஆளுகை கட்டமைப்புகள், தேசிய நீர் வளங்கள் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு நிறுவன ரீதியான வலுப்படுத்தல், மற்றும் செயல்பாடு மற்றும் பராமரிப்பு முறைச பின் இணைப்பு 2 ிற்கு நிகழ்ச்சித்திட்டங்களைப் பரிந்துரைக்கும்.

(iii) மேம்படுத்தப்பட்ட நீர்பாசன செயலாற்றலுக்கான நீர் உற்பத்தித்திறன் மதிப்பீடு தொடர்பான ஆய்வு. செய்மதி தொலைக்கட்டுப்பாட்டு உணர்திறன் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும். இந்த ஆய்வு நீர்ப்பாசன முகாமையாளர்களுக்கு பயிர் நீர் அழுத்தம் மற்றும் நீர் பற்றாக்குறையின் போது பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு உதவும்.

---

[3] ஆ.அ.வ. 2014. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினது நிறுவன மேம்பாட்டிற்காக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கான தொழில்நுட்ப உதவி. மணிலா.

[4] ஆ.அ.வ. 2016. முதியோர் பராமரிப்பில் அபிவிருத்தியடைந்துவரும் உறுப்பு நாடுகளினை வலுப்படுத்தல் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கான தொழில்நுட்ப உதவி. மணிலா. https://www.adb.org/projects/documents/strengthening-dmc-capacity-in-elderly-care-tar

[5] ஆ.அ.வ. 2016. பணிப்பாளர் சபைக்கு தலைவரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகள்: இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் மூலதனச் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்மொழியப்பட்ட கொள்கை அடிப்படையிலான கடன், தொழில்நுட்ப உதவி மானியம் மற்றும் தொழில்நுட்ப உதவி மானிய நிர்வாகம். மணிலா. https://www.adb.org/sites/default/files/project-document/202466/49365-002-rrp.pdf

**இ. பங்காளர்களுடனான கூட்டுச் செயற்பாட்டிற்கான பரப்புக்கள்**

17. ஆ.அ.வ. அரசாங்கம், அபிவிருத்திப் பங்காளர்கள், மற்றும் உள்ளூர் சிந்தனையாளர்கள், மற்றும் கல்விசார் நிறுவனங்கள் உட்பட ஏனைய பங்குதாரர்களுடன் திட்டமிடல், நிகழ்ச்சிநிரலிடல், மற்றும் அறிவுச் சேவைகள் மற்றும் பொருட்களின் விநியோகம், அத்துடன் பரந்த அறிவுப் பகிர்வு மற்றும் பரிவர்த்தனைகளில் ஈடுபடும்.

**ஈ. வள ஒதுக்கம்**

18. தொழில்நுட்ப உதவி மற்றும் ஆலோசனைச் சேவைகள் வெளியீடுகளின் விநியோகத்திற்கு ஒரு முக்கிய வளமாக இருக்கும். நாட்டிற்கு குறிப்பான உதவிக்கு மேலதிகமாக, ஆ.அ.வ. மற்றும் ஆ.அ.வ. நிறுவங்களின் பிராந்தியத்தின் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் அரசாங்கத்திற்கு உதவுவதற்குப் பயன்படுத்தப்படும். நம்பிக்கை நிதியங்கள், அபிவிருத்தி பங்காளர்களிடமிருந்தான இணைநிதியிடல், மற்றும் அரசாங்கத்துடன் செலவுப் பகிர்வு கூட அறிவுப் பணிக்கு ஆதரவளிக்கும்.

**இணைக்கப்பட்ட ஆவணங்களின் பட்டியல்**

http://www.adb.org/Documents/CPS/?id=SRI-2018

1. உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான வளர்ச்சி மதிப்பீடு
2. அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அமைவுரு
3. நாட்டு செயல்பாடுகள் வியாபாரத் திட்டம்: இலங்கை, 2018-2020